Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-25 | 10-08-2005 | புதன் கிழமை | ஓசை-173



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12425)

## போர்நிறுத்தம் சரிவரப் பேணப்படுவதற்கு போராளிகளின் பாதுகாப்பு இன்றியமையாதது

### -கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வேயிடம் வலியுறுத்து



அரசியல் போராளிகள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்குவதற்கான சரியான புறநிலையை அமைத்துக் கொடுப்பது அரசின் கடப்பாடு. போர் நிறுத்தம் சரிவரப் பேணப்படுவதற்கு இது முக்கியமானது என அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நோர்வே அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

தமிழர் தாயகத்தில், குறிப்பாக தென் தமிழீழத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக சிறிலங்கா அரச படைகளும், தமிழ் கூலிப் படைகளும், கூட்டாகச் சேர்ந்து நிகழ்த்தி வரும் நிழல் யுத்தத்தை, உடனடியாக நிறுத்துமாறு சிறிலங்கா அரசுக்கு அனைத்துலக நாடுகள் காத்திரமான

(12ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் படையணி மூத்த போராளிகள் ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணியின் மூத்த போராளிகள் ஊடகவியலாளர்களை இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இன்று காலை பத்து மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினுள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் தூரநோக்குடன் பெண்கள் உள்வாங்கப்பட்டு எதிர்வரும் 18 ஆம் நாளுடன் இருபதாண்டுகள் நிறைவாகின்ற நிலையில், கடந்த இருபதாண்டுகளில் ஈழவிடுதலைப் போராட்டத்தில் பெண்கள் வகித்த பங்கு பற்றியும், தாம் ஏன் போராடவந்தார்கள் என்பது பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

### — சுனாமி அனர்த்த நிவாரண உதவிகளில் —

# இனரீதியில் புறக்கணிக்கப்படுவதாக

# அம்பாறை - கோமாரி மக்கள் ஆர்ப்பாட்டம்!

## வீதி மறியலிலும் ஈடுபட்டனர்

(அம்பாறை)

**கோமாரி 01, களுகொள்ள நலன்புரி நிலையத்தில் வாழும் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் தமது அடிப்படை வசதிகளை வலியுறுத்தியும், தாம் தமிழர்கள் என்பதால் அரச அதிகாரிகளினால் இனரீதியாகப் புறக்கணிக்கப்படுவதாகவும் குற்றம்சாட்டி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியதோடு, வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.**

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கோமாரி 01, களுகொள்ள நலன்புரி நிலையத்தில் வாழும் ஆயிரத்திற்கும் அதிகமான மக்களால் தமது அடிப்படை வசதிகளை வலியுறுத்தியும், தம்மை அரச அதிகாரிகள் புறக்கணிப்பதைக் கண்டித்தும் நேற்று வீதி மறியல் மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணி எனபனவற்றை நடத்தினர்.தங்களின் நலன்புரி நிலையத்திலிருந்து கோமாரி-2 வரை ஊர்வலமாகச் சென்றனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து கோமாரி-1 களுகொள்ள நலன்புரி நிலையத்தில் வாழும் சுமார் 372 குடும்பங்களின் அவல நிலை ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஏழு மாதங்கள் கடந்த பின்பும் தீர்க்கப்பட்டதாக இல்லை.

இவர்களின் குறைபாடுகள் இதுவ

(12ஆம் பக்கம் பார்க்க)



## மதமாற்ற சட்டமூல தெரிவுக் குழுவின் தலைமைப்பதவியை பிரதமர் துறப்பு!

மதமாற்றல் சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்துள்ளார். பாராளுமன்றில் விசேட உரை ஒன்றை ஆற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். கட்சித் தலைவர்களின் பொது உடன்பாட்டின்படியே பிரதமரை இந்தப் பதவிக்குத் தெரிவு செய்ததாக பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தினதேரர் தெரிவித்தார். தெரிவுக் குழுவின் அனுமதியுடனேயே பிரதமரை நியமித்ததாக எதிர்க் கட்சியின் பிரதம கொரடா மகிந்த சமரசிங்க தெரிவித்தார். இங்கு கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இந்தப் பதவிக்கு எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்யவேண்டுமெனத் தெரிவித்தார். இருப்பினும் இன்று இடம்பெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தலைவர் பதவி தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படுமென சபாநாயகர் தெரிவித்துள்ளார். (32)

## 2006 இல் சிறிலங்கா சனாதிபதித்தேர்தல்; தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுக!

### - உயர் நீதிமன்றில் நேற்று மனுத்தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டில் நடத்தப்படவேண்டும் என தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடவேண்டும் எனக்கோரி நேற்று உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய சனாதிபதி தேர்தல் 2005 ஆம் ஆண்டில் நடைபெறவேண்டும் எனக் கோரி ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தது.

இந்தநிலையில் இதற்குப் பதிலாகவே இம் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி 1999ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகா குமாரதுங்க அதே ஆண்டு டிசம்பர் 22 ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதன் பின்னர் அவர் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்தாம் திகதி மீண்டும் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மின்சாரநிலைய வீதியை திறக்கும் கோரிக்கை சிறிலங்கா படைத்தரப்பினால் மீண்டும் நிராகரிப்பு

(வடமராட்சி)

யாழ்.நகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் நிலையை போக்க மின்சாரநிலைய வீதியை திறந்து விடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை சிறிலங்காப் படைத்தரப்பு மீண்டும் நிராகரித்துள்ளது.

யாழ். செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றின் போதே சிறிலங்கா படைத்தரப்பால் இக்கோரிக்கை மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரப்பகுதியில் எழுந்து வரும் நெரிசல் நிலையை கருத்திற்கொண்டு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு பொதுமக்கள் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டுள்ள மின்சார நிலைய வீதியை திறந்துவிட நடவடிக்கை எடுக்குமாறு மாநகர ஆணையாளர் க. குணராசா கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த வீதியினை மக்கள் பாவனைக்கு திறந்து விடுமாறு பலதரப்புகளும் தொடர்ச்சியான கோரிக்கைகளை விடுத்து வருகின்றபோதும், அதனை நிராகரித்து வரும் படைத்தரப்பு அப்பகுதியிலேயே 51-2 படைப்பிரிவின் தலைமையகத்தை இயக்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் தாக்குதலில் கல்குடாவில் ஒருவர் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை கல்குடாப்பகுதியில் வைத்து நேற்றிரவு 7.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இவர் தேசவிரோத கருணா கும்பலைச் சேர்ந்தவராக இருக்கலாம் என சிறிலங்காப் படையினர் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்ட இளைஞர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.இவர் உந்துருளி ஒன்றில் கடத்திவரப்பட்டு அப்பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கொழும்பின் பாதுகாப்பு; மாதமொருமுறை ஆராய்வு

(கொழும்பு)

கொழும்பு நகரில் பாதுகாப்புத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், நீதித்துறை அதிகாரிகளும் மாதம் ஒரு முறை கூடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொலிஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணிவிற்பனைக்கு

இல-79 B, 1ஆம் குறுக்கு, 8 ஆம் வாய்க்கால், உருத்திரபுரம் குடியிருப்புகாணி 1.1/2 ஏக்கர் கிணறு 22 அடி விட்டத்திலும், தென்னை, பனை மரம், மாமரமும் வீடும் உள்ளது வயல் நிலம் 2 ஏக்கர் இரண்டுபோகஞ் செய்யக் கூடியது தொடர்பு:- திருR.சிறீகாந்தன், 210, ஜெயந்திநகர், கிளிநொச்சி (6198)


# ஒக்ஸ்பாம்நிறுவன உதவியுடன் 70 மலசல.கூடங்கள் அமைப்பு

வட்டக்கச்சி மாயவனூர் பிரதேசத்தில் ஒக்ஸ்பாம் நிறுவன நிதி உதவியுடன் கிளி. கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் முதலாம் கட்டமாக வட்டக்கச்சிப் பிரதேசத்தில் 62 மலசலகூடங்கள் கட்டிமுடிந்துள்ளது. இரண்டாம் கட்டமாக மாயவனூர் கிராமத்திலும் பத்து வீட்டுத்திட்ட உட்கிராமத்திலும் 70 மலசலகூடங்கள் அமைக்கப் பட்டுவருகின்றது. இவ் மலசல கூடங்கள் அமைப்பினர் வட்டக் கச்சிப் பிரதேசத்தில் பெருமளவான தொற்று நோய்களைக் கட்டுப்படுத் தப்பட்டு வருகின்றது. என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. (12)

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் குற்றத்தடுப்பு நடவடிக்கை

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள் குற்றதடுப்புப் பிரிவினரால் பெருமளவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் பிரதேசத்தில் மது போதையில் வாகனம் செலுத்தவோர், துவிச்சக்கர வண்டியில் பக்கம் பக்கமாக செல்லுதல், வாகனங்களில் இரவு வேளைகளில் ஒளி இன்றிப் பயணித்தல், வாகனங்களின் இருக்கைகளை விட கூடுதலானோர் பயணித்தல், இரவு வேளைகளில் சந்திகளில் கூடி நிற்போர் மீதும் கடும் நடவடிக்கை எடுத்து அபராதம் விதித்து குற்றங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. மற்றும் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் இரவு நேர வீதி ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதானால் களவு போன்ற பாரிய குற்றத்தடுப்பை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது என்றும் வட்டக்கச்சிப் பிரதேச குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.


## பொன்விழாக்காணும் மு/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திற்கு ஸ்தாபகரும் முதல் அதிபருமாகிய திரு. முருகுப்பிள்ளை நேசரத்தினம் குடும்பத்தினர் மனமுவந்து வழங்கும் வாழ்த்துச்செய்தி

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் 50 ஆண்டுகள் நிறைவினையொட்டிய பொன்விழா நிகழ்விற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ஐம்பது ஆண்டுகளிற்கு முன்னர் வறுமையினாலும் , கல்வியறிவு போதாமையினாலும் ,மாலுமியற்ற மரக்கலம் போன்று தத்தளித்து வாழ்ந்துகொண்டிருந்த புதுக்குடியிருப்புக் கிராம மக்களைக் கண்ணுற்ற, தண்ணீரூற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட அதிபர் அமரர் முருகுப்பிள்ளை நேசரத்தினம் அவர்கள் பல இடர்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியில் இவ் வித்தியாலயத்தினை ஸ்தாபித்தார்.

வன்னிப் பொரு நிலப்பரப்பு மக்கள் அனைவரும் கல்வியறிவு பெற வேண்டும் என்ற சீரிய சிந்தனையின்பால் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்பதற்கமைய அன்னாரினால் ஸ்தாபிக்கப்பட்டதே புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயமாகும். அந்த நேரத்தில் ஒரு நல்ல அரசன் போலவே அமரர் வாழ்ந்து வழிகாட்டினார்.

"தூங்காமை, கல்வி, துணிவுடமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு " -திருக்குறள்

காலந்தாழ்த்தாமை, கல்வியுடமை, துணிவுடமை ஆகிய இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை, இங்கு நிலத்தை ஆளும் அரசனை அதிபர் அமரர் நேசரத்தினத்திற்கு ஒப்பிடலாம். மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுக்குள்ளும், வரையறுக்கப்பட்ட வாய்ப்புகளுக்குள்ளும். அன்னாரது அயரா உழைப்பினால் வளர்ந்ததே இவ் வித்தியாலயம்.

இன்று பொன்விழாக்காணும் நேரத்தில் நெடிதுயர்ந்து, வளர்ந்து, கிளைபரப்பி மேற்குலகில் புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழ் நெஞ்சங்களின் உணர்வலைகளைத் தட்டிஎழுப்பு மளவிற் குநிமிர்ந்து நிற்கிறது புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி அதிபர், ஸ்தாபகர் திரு. மு. நேசரத்தினத்திற்குப் பின் அன்னாரின் கனவுகள் நனவாகும் வகையில் பல கல்விமான்கள் அதிபராக இருந்து தங்களை அர்ப்பணித்து இவ்வித்தியாலயத்தினை வளர்த்துள்ளனர், ஸ்தாபகரின் ஊரான தண்ணீரூற்றையே பிறப்பிடமாகக் கொண்டவரும், இப் பொன்விழாவின் தலைவருமான தற்போதைய அதிபர் திரு.கந்தையா சிவலிங்கம் அவர்கள் ஆற்றலும், திறமையும் செயற்றிறனுமுடையவர். இவரது தலைமையின் கீழ் இவ்வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சியடைந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் புகழ்மணம் பரப்ப இறைவனைப் பிரார்த்தித்து உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்க மாணவர்கள் ,ஆசிரியர்கள் .
வளர்க புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

(சி.12495)

திருமதி. மல்லிகா தேவிபாலசிங்கம் குடும்பம்,
திருமதி.நேசராசதேவி சிவராசா குடும்பம்.



## தமிழீழ தேசியத்தொலைக்காட்சி

### KU Band இல்

தினமும் தமிழீழ நேரம் இரவு 8.00 மணி முதல் 9.00 மணி வரை.




### தென்கிழக்கு ஆசியாவிற்கு

### ஆகஸ்ட் 1ம் திகதி முதல் ஒளிபரப்பாகிறது

**தொழிநுட்பத் தகவல் :**

Satellite : Europe Star (1) Ku 45°E
Azimuth : 258°
Frequency : 11056 Mhz
Symbol rate : 2.894MS/s
Polarity : Vertical
FEC : 3/4


**தொடர்புகளுக்கு :**

தமிழீழ தேசிய தொலைக்காட்சி,
தொடர்பகம்,
மத்திய கல்லூரி முன்பாக,
யாழ்சாலை,
கிளிநொச்சி,
தமிழீழம்.

(சி.12502)

மின்னஞ்சல்: info@tamilntt.com T.P. No: 0212285816

# சற்றல் டிஸ்கவரி விண்கலம் வெற்றிகரமாக தரையிறங்கியது



நாசாவின் டிஸ்கவரி விண்கலம் நேற்று தரையிறங்கியிருந்த வேளை விண்வெளி மைய தொலைக்காட்சியில் காலநிலை பற்றிய விபரம் குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானிக்கும் லெப்.கேணல் மரியா கார்ல்.

(புளோரிடா)

**நாசா விண்வெளிக்கு அனுப்பிய சற்றல் டிஸ்கவரி விண்கலம் வெற்றிகரமாக நேற்று தரை இறங்கியது. பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஏவப்பட்ட இந்த விண்கலம் விண்ணில் வைத்தே பழுது பார்க்கப்பட்டது விசேட அம்சமாகும்.**

கலிபோர்னியாவிலுள்ள எட்வெஸ்ட் விமானப்படைத்தளத்தில் சிறிலங்கா நேரப்படி நேற்று மாலை 6.12 மணிக்கு விண்கலம் தரை இறங்கியதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். 2003 ஆம் ஆண்டு கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியதையடுத்து டிஸ்கவரி பாதுகாப்பாக தரை இறங்கியுள்ளது.

கடந்த மாதம் இரண்டாம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்கலம் கடந்த ஞாயிற்றுக் கிழமை தரை இறங்க ஏற்பாடாகி இருந்த போதும் சீரற்ற காலநிலை காரணமாக அது தரை இறங்குவது பின் போடப்பட்டது. விண்வெளியில் இருந்து மீண்டும் பூமிக்குத் திரும்பியதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதாகவும்



விண்வெளி வீரர்கள் அனைவரும் செவ்வன தங்கள் கடமைகளை ஆற்றியதற்கு தாம் பாராட்டுவதாகவும் டிஸ்கவரி விண்கலத்தின் கட்டளையிடும் அதிகாரி எயின் காயின் தெரிவித்துள்ளார்.



நேற்று இஸ்தான்புல்லில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் சேதமடைந்த கட்டடம் ஒன்றின் தோற்றம். சம்பவத்தில் இரண்டு பேர் பலியானதாகவும் ஆறு பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இஸ்பஹான் அணு உலைப் பணிகளை ஈரான் மீண்டும் ஆரம்பித்துள்ளது

ஈரான் தனது இஸ்பஹான் அணு உலையில் மீண்டும் பணிகளை ஆரம்பித்து விட்டதாக அறிவித்துள்ளது. இதனை சர்வதேச அணு ஆற்றல் நிறுவனம் உறுதி செய்துள்ளது.

ஆயினும் சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தின் கண்காணிப்பில் இல்லாத பகுதிகளிலேயே இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

அதேவேளை இன்னும் சில நாட்களில் பணிகளை ஆரம்பிக்க அனுமதிக்கும் ஒரு நகர்வாக அந்த அணு உலையின் ஏனைய பகுதிகளில் கண்காணிப்புக் கருவிகளை அமைக்கும் பணிகளை ஐக்கிய நாடுகள் சபையின் ஏஜென்ஸி பூர்த்தி செய்துள்ளதாகவும் உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தின் அவசர கூட்டம் ஒன்றின் இறுதி வேளையில் இந்தச் செய்திவந்துள்ளது.

சர்ச்சைக்குரிய ஈரானின் அணுத்திட்டத்தை கைவிடச்செய்வதில் முயன்று வரும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு மோதல் நிலையை ஏற்படுத்தும் வகையில் ஈரானின் கொள்கை கடுமைப்படுத்தப்படுகிறது என்பதையே இது காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது கொள்கையைக் கடுமையாக்கும் வகையில் ஈரான் மேற்கொள்ளும் இன்னுமொரு முயற்சியாகப் பார்க்கப்படும் ஒரு நடவடிக்கையில் ஈரான் தனது அணுத்திட்ட சமரசப் பேச்சு வார்த்தையாளரை விரைவில் மாற்றவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

## தென்னாபிரிக்க சுரங்க தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரிப் போராட்டம்

தென்னாபிரிக்க தங்கச்சுரங்கத் தொழிலாளர்கள் தமக்கு பத்து முதல் 12 வீதம் வரையிலான சம்பள உயர்வை வழங்கக் கோரிப் போராட்டம் நடத்திவருகின்றனர்.

அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தப் போராட்டத்தை நடத்துவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்கச்சுரங்கத் தொழிலாளர்கள் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதாக தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர். தென்னாபிரிக்க தங்கச்சுரங்க ஊழியர்களின் கவலையீனத்தால் நாளாந்தம் 20 மில்லியன் நஷ்டம் ஏற்படுவதாக அந்நாட்டின் சுரங்க அகழ்வுப்பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் சுரங்கத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க முடியாதென்றும், சம்பள உயர்வு கோரும் கோரிக்கை நியாயமற்றது என்றும் பணியகம் குறிப்பிட்டுள்ளது. உலக நாடுகளுக்குத் தேவையான தங்கத்தில் 15 வீதத்தை தென்னாபிரிக்கா வழங்கி வருகின்றது.

# ஈராக்கில் மணல் புயல் ஆயிரம் பேர் வரை பாதிப்பு

(பாக்தாத்)

குண்டு வெடிப்புக்களால் நிலை குலைந்து போயிருக்கும் ஈராக்கை நேற்று முன்தினம் மணல் புயல் தாக்கியுள்ளது. பாக்தாத், மற்றும் சுற்றி உள்ள பகுதிகளில் சுழன்று அடித்த காற்றில் மணல் குவியல் குவியலாக வீதிகளில் குவிந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வீதிகளில் வாகனங்களில் சென்றோர், வீதிகளில் நடந்து சென்றோர் எல்லோரும் தூக்கி வீசப்பட்டதாகவும், ஏராளமான மின் கம்பங்கள் சாய்ந்து விழுந்ததாகவும் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கிக் கிடந்தவர்களும் மூச்சுக் காற்றுடன் புழுதி மணல் உள்ளே சென்றதால் மூச்சுத் திணறல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மணல் புயல் காரணமாக 1000 பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. விமானப் போக்குவரத்தும் இரத்துச்செய்யப்பட்டது. இன்னும் இரண்டு நாட்களுக்கு இந்த மணல் புயல் நீடிக்கும் என்று வானிலை மையம் எச்சரித்துள்ளது.



பாக்தாத்துக்கு 270 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சமவாவில் நேற்று முன்தினம் நடந்த அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது இருவர் பலியானதைத் தொடர்ந்து அங்கு காவலில் ஈடுபட்டுள்ள ஆயுததாரிகள்.



காஸா முனையிலிருந்து இஸ்ரேலியப் படைகள் படிப்படியாக வாபஸ் பெறப்படுமென சனாதிபதி மகமூத் அப்பாஸ் தெரிவித்த நிலையில் அப்பகுதியில் சண்டைப் பயிற்சியில் ஈடுபடும் இஸ்ரேலியப் படையினர்.

## நேபாளத்தில் காணாமல் போன படையினரைத் தேடி மேலதிக படையினர்

நேபாளத்தில் சுமார் 100 படையினர் வரை காணாமல் போயுள்ள நாட்டின் மேற்குப் பகுதிக்கு மேலதிக படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

கெலிகொட் மாவட்டத்தில் போராளிகள் நடத்திய தாக்குதலில் சுமார் 159 படையினர் கொல்லப்பட்டதாக போராளிகள் தரப்பு உரிமை கோரியுள்ளது.

இதனைப் படைத்தரப்பு மறுத்துள்ள போதிலும் பெரும் எண்ணிக்கையான படையினர் கொல்லப்பட்டதை படைத்தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. படைத்தரப்புக்கும் போராளிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சுமார் 11 மணித்தியால மோதலின் போது இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வெடிப்புக்களுக்குக் காரணம் மதப்பள்ளிகள் என்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் நோக்கில் லண்டனிலுள்ள பாகிஸ்தானிய மதப்பள்ளிகள் இராஜதந்திரிகளின் வருகைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது

# இங்கிலாந்தைச் சேர்ந்த 15 வயது எயிட்ஸ் மாணவி குழந்தை பெற்றார்

(லண்டன்)

உலகம் முழுவதும் 'எயிட்ஸ்' நோய் வேகமாகப் பரவி வருகிறது. ஆபிரிக்க நாடுகள் தான் இதில் முதல் இடத்தில் உள்ளன. எனறாலும் மேற்கத்தேய நாடுகளும், வளர்ந்த நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

இங்கிலாந்தின் சுவாம் பகுதியைச் சேர்ந்த 15 வயதுப் பள்ளி மாணவி ஒருவர் திடீர் என்று கர்ப்பமடைந்தார். ஆனால் அவர் வயிற்றில் வளரும் குழந்தைக்கு தந்தை யார் என்பது தான் அவருக்குத் தெரியவில்லை. ஏற்கனவே ஒரு வாலிபனைக் காதலித்து விட்டு இன்னொரு வாலிபருடன் அவர் நெருங்கிப் பழகி வந்தார்.

மருத்துவ பரிசோதனைக்காக அங்குள்ள வைத்தியசாலைக்கு சென்ற கர்ப்பிணி மாணவிக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த மாணவியின் இரத்தத்தில் எச்.ஐ.வி கிருமிகள் பரவி இருந்தது தெரியவந்தது.

எயிட்ஸ் கிருமிகள் பாதித்த அந்த மாணவிக்கு வைத்தியர்கள் தொடர்ந்தும் சிகிச்சை அளித்து வந்தனர்.

இந்த நிலையில் அந்த மாணவிக்கு அழகான குழந்தை பிறந்தது. ஆனால் அந்தக் குழந்தைக்கு மருத்துவ பரிசோதனை நடத்தியதில் குழந்தைக்கு எயிட்ஸ் பாதிப்பு எதுவும் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## தீவிரவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படும் முஸ்லிம் போதகர்களுக்கு ஆயுள் தண்டனை

(லண்டன்)

லண்டனில் இடம்பெற்ற இரண்டு குண்டு தாக்குதல்களுக்குக் காரணமான தீவிரவாதிகளை லண்டன் பொலிசார் வலைவீசித்தேடி வருகின்ற நிலையில் நேற்று முன்தினம் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹாரூன் ரஷித் அஸ்வத் என்ற வாலிபரை லண்டன் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இதற்கிடையில் தற்கொலைப் படைத்தாக்குதல், தீவிரவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் பேசும் முஸ்லிம் மத போதகர்களைக் கைது செய்ய லண்டன் பொலிசார் முடிவு செய்துள்ளனர். கைது செய்யப்படும் மத போதகர்களுக்கு அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடப்பு வாரத்தில் இங்கிலாந்து உயர் பொலிஸ் அதிகாரிகளும், சட்ட நிபுணர்களும் கூடி ஆலோசனை நடத்தவுள்ளனர். "டெய்லி டெலிகிராப்" என்ற பத்திரிகை இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.

# போர் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழீழப் பெண்கள் சாதனை படைக்கின்றனர்

## -திருமலை கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம்



**உலகில்பெண்கள் இன்று பல்வேறு துறைக ளிலும் பங்குபற்றுகின்றனர். ஆனால் தமிழீழப் பெண்கள் போரியல், உளவு மற்றும் பலதுறைகளில் சாதனை படைக்கின்றனர். எமது தேசியத்தலைவர் அவர்களின் தூரநோக்கான சிந்தனை காரணமாக பெண்கள் படைப்பிரிவு எமது இயக்கத்தில் உருவாக்கப்பட்டது என திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்துள்ளார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கில் உள்ள பள்ளிக்குடியிருப்பில் இடம்பெற்ற பெண்கள் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போராட்ட காலத்தில் பெண்களது பங்கு அளப் பரியது. பல வெற்றிகளையும் அவர்கள் தேடித்தந் துள்ளனர். வேறு நாடுகள் வியக்கும் வண்ணம் எமது பெண்களின் படைப்பிரிவுகள் பல சாதனைகளைப் படைத் துள்ளன என்று அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் காருண்யா தலைமையில் காலை பத்து மணிக்கு கலைமகள் இந்துக்கல்லூரியில் இந்த சங்கம நிகழ்வு நடைபெற்றது. இதில் பள்ளிக்குடியிருப்பு மற்றும் அயற்கிராமங்களிலுள்ள பெண்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

# ஜாஎலவில் மிளகாய்த்தூள் வீசி பொலிசாரிடம் துப்பாக்கி பறிப்பு

மிளகாய்த்தூளை முகத்தில் வீசி இரு சிறிலங்கா பொலிஸ் கான்ஸ்டபிள்களின் துப்பாக்கிகள் அப கரிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் ஜாஎலப் பிரதேசத்தில் இடம் பெற்றது. கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இரு வரும் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை முச்சக்கர வண்டியில் வந்த ஐவர் கொண்ட குழு அவர்களின்கண்களில் மிள காய்த்தூளை வீசி, பின்னர் முதுகில் கத்தியால் குத்திவிட்டு துப்பாக்கி களைப் பறித்துச்சென்றுள்ளனர்.

# விழிப்புணர்வுக் கருத்தரங்கும் புதிய நிர்வாகத்தெரிவும்

பூநகரிப்பிரதேசத்தில் அரசியல் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் புதிய நிர்வாகத் தெரிவும்கடந்த சனிக்கிழமை கிளி/நல்லூர் மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தலைமையுரையைத் தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது.தலைவராக இ.பாலசுப்பிரமணியமும் உபதலைவராக ந.தெட்சணா மூர்த்தியும் ,செயலாளராக சி. சிவப்பிரகாசமும் உப செயலாளராக குமாரும் மற்றும் ஒன்பது நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அதைத்தொடர்ந்து பூநகரிஅரசியல்துறைப்பொறுப்பாளர் ஈகைவேந்தன், வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் கணேசபிள்ளை, மாவட்ட தேசிய எழுச்சி பேரவைத்தலைவர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் சமகால அரசியல் நிலை தொடர்பாகவும் வவுனியாவில் நடைபெற்றதைப்போன்று தேசிய எழுச்சி மநாடு, கிளி. மாவட்டத்திலும் நடாத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் அதற்கான ஒழங்கு நடவடிக்கைகள் பற்றியும் கலந்து ரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் அதிபர். ஆசிரியர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசியஎழுச்சிப்பேரவையினர் எனப் பலர் கலந்து தங்களது ஆலோசனைகளைத் தெரிவித்தனர். (34)

# சுனாமியால் பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு மோசமான காலநிலையால் மேலும் பாதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு பல மாதங்களாக கடலுக்குச் செல்லாது இருந்த மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடித் தொழிலை ஆரம்பித்து ஒரு வாரத்திற்குள் கடும் காற்றும், கடல் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளதால் மீன வர்களின் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் காற்றுடன் நிலவும் வரட் சியால், சுனாமியால் பாதிக்கப்பட்டு இடைத் தங்கல் முகாம்களில் தங்கியிருப்பவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பலரின் குடி சைகள் கூட இந்தக்காற்றினால் சேதத்திற்குள்ளான நிலையில் மக்கள் ஏனையவர்களின் குடிசை களில் தஞ்சமடைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத் தில் சுனாமிப் பேரலையின் பின்பு குடிநீர்க் கிணறுகள் எல்லாம் உவர் நீராக மாறியுள்ளதினால் குடிநீருக்குக் கூட பஞ்சம் ஏற்பட்டுள்ளது. தற்போது சமூகசேவைநிறுவனங்கள் "பவுசர்" மூலம் குடிநீர் வழங்கிவருகின்றன. வரட்சி, குடிநீர் வசதி இல்லாமை காரணமாக பல வகையான தொற்று நோய்களும் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்கள தகவல்கள் கூறுகின்றன. மாவட்டத்திலுள்ள சிறிய, நடுத்தரக் குளங்கள் வற்றி, வரண்டு போயுள்ளமையினால் காட்டு மிருகங்கள் கூட கிராமப்புறங் களுக்குப் படையெடுக்க ஆரம்பித் துள்ளன. சென்ற வாரத்தில் அக் கரைப்பற்றில் விவசாயி ஒருவர் காட்டு யானையால் தாக்குண்டு மரணமடைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் இறந்தவர்களுக்கு நினைவாலயம் பெயர் விபரங்களை உடன் அனுப்பவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் இறந்தோர்களின் நினைவாக நினைவாலயம் ஒன்று முல்லைத்தீவு புனித இராஜப்பர் ஆலயத்தில் நிறுவப்படவுள்ளது.

இதில் சுனாமியால் இறந்தவர்களின் பெயர் விபரங்கள் பொறிக்கப்படவுள்ளது. எனவே இறந்தவர்களின் பெயர் விபரங்களை இது வரை வழங்காதோர் புனித அன்னம்மாள் ஆலயம். சிலாவத்தை,முல்லைத்தீவு எனும் விலாசத்திற்கு அறியத்தருமாறு முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அறியத்தந்துள்ளார். இதன்படி நேரடியாக தொடர்பு கொண்டுவிபரங்களை தந்துதவுமாறு அறிவித்ததோடு இடைத்தங்கல் முகாமில் குழுக்கள் ஊடாக பதிவு செய்தவர்கள் தேவையில்லையெனவும் ஏனையோரின் விபரங்களை நேரடியாக அனுப்பிவைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (20)

# வட்டக்கச்சி மகப்பேற்று விடுதி பூரணப்படுத்தப்பட்டும் கையளிக்கப்படவில்லை

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சி மகப்பேற்று விடுதி பூரணப்படுத்தப்பட்டு கையளிக் கப்படாமல் உள்ளது என. கிளி மாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி விசனம் தெரிவித் துள்ளார்.

இந்த விடுதி பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்படாமையினால் வட்டக்கச்சி பிரதேச வாழ் மக்கள் மகப்பேற்று பிரச்சினைகளுக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு பல சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன் றியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். (கு,தீ)

# மன்னார் இந்து. கல்லூரி மாணவருக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி

(அலுவலக செய்தியாளர்)

கடந்த மாத இறுதியில் மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு மூன்று இலட்சத்து 50 ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கான காசோலையினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தலைவர் ப.மரிய நாயகம் குரூஸ், மாவட்டப்பணிப்பாளர் சு.கேசவன் ஆகியோரால் பாடசாலை அதிபர் தயானந்தராஜா ஆசிரியை மேரி ஏஞ்சலா ஆகியோரிடம் மன்னார் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டச் செயலகத்தில் வைத்து ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந் நிதியானது தென்கொரியாவின் தலைநகர் சியோலில் நடைபெற்ற சமயங்களுக்கிடையிலான கலாச்சார நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (தீ.லோ)

# கனடாவில் தமிழர் திருநாள்;15,000இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

கடந்த சனிக்கிழமை கனடா ரொறன்ரோ நகரில் நடைபெற்ற மூன்றாவது வருடாந்த தமிழர் திருநாள் நிகழ்வில் 15,000இற்கும் மேற்பட்ட கனேடிய தமிழர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

அமெரிக்காவின் "டிஸ்னி வேல்ட' போன்று சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஒருநாளை இனிதே கழிக்கும் வகையில் 65 சவாரிகள், 200காட்சிகள் என பிரமாண்டமான தளத்தை கொண்டுள்ள ரொறன்ரோவில் பரமவுண்ட் வொன்டர்லாண்டிலேயே தமிழர் திருநாள் நிகழ்வு நடைபெற்றது.

வழமையாக 56.21 டொலர்களுக்கு விற்கப்படும் நுழைவுச்சீட்டு, தமிழர் திருநாளை முன்னிட்டு விசேட கழிவு விலையில் 28 டொலர்களுக்கு விழா அமைப்பாளர்களான கனேடிய தமிழ் இளையோர் அமைப்பால் விற்பனை செய்யப்பட்டது. விழாவிற்கு முந்திய மூன்று நாட்களும் நுழைவுச்சீட்டுகளுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் முண்டியடித்ததை எங்கும் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த வருடத்தைவிட இம்முறை இருமடங்கு நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையாகியதாக விழா அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

முதன்முறையாக தமிழர் உணவுச்சாவடிகள், அங்கு அமைந்தது சிறப்பாக இருந்தது. கொத்து ரொட்டிக்கும் கரம்சுண்டலுக்கும் , சுருள் கடலைக்கும் என மக்கள் உணவுப் பகுதியை அது திறக்கப்பட்ட பிற்பகல் ஒரு மணியில் இருந்து இரவு 10.30 மணி வரை நிறைந்து நின்றனர். ஏனைய இனத்தவர்களும் தமிழர் உணவுகளை சுவைத்தவாறு சென்ற தைக் காண முடிந்தது.அத்துடன் மாலை 6.45 மணி முதல் இரவு பத்து மணிவரை 15 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பிரமாண்டமான அரங்கில் தமிழர் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

வெளியில்இருந்து குழுவினரை அழைத்து நிகழ்வுகளை நடத்தாமல், கனேடிய ஈழத்தமிழர் திறமைகளை மட்டும், அதிலும் குறிப்பாக இளையவர்கள் திறமைக்கு முதன்மை யளித்து நடத்தப்பட்ட நிகழ்வுகள் சிறப்பாக அமைந்தன. நுழைவுச் சீட்டுகளில் பெறப்பட்ட தொகையில் ஒவ்வொரு நுழைவுச்சீட்டில் இருந்தும் ஐந்து டொலர்களை ஆழிப்பேரலை நிவாரணத்திற்கு வழங்க வொன்டர்லாண்ட் நிர்வாகம் முன்வந்துள்ளது.








படங்கள்:-எழிலன்

# முகமாலையில் படையினரின் விசாரணைக் கெடுபிடிகள் அதிகரிப்பு

(முகமாலை)

**முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் படையினரின் விசாரணைக் கெடுபிடிகள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன.**

பயணிகளின் அடையாள அட்டைகளைப் பதிவு செய்யும் பொலிசாரும், படையினரும் பயணிகளை துருவித்துருவி விசாரித்து வருகின்றனர்.

பயணிகள் பிரயாணம் செய்யும் இடம் மற்றும் பயணிகள் புறப்பட்ட இடம், பயணிகளின் பிரயாண நோக்கம் உட்பட பல கேள்விகளை படையினர் கேட்டு வருகின்றனர்.

படையினரின் இந்த விசாரணை நடவடிக்கைகள் காரணமாக யாழ். குடாநாட்டுக்குச் செல்வோரும் அங்கிருந்து வன்னி உட்பட வெளி மாவட்டங்களுக்குச் செல்வோரும் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.

படையினரின் இந்த நடவடிக்கை குறித்து அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## புங்குடுதீவு திலீபன் மருத்துவசேவைக்கு நோயாளர் காவுவண்டி அன்பளிப்பு

புங்குடுதீவு தியாகதீபம் திலீபன் மருத்துவசேவைக்கு கனடாவில் வாழும் புங்குடுதீவு பழைய மாணவர்களின் நிதியுதவியால் நோயாளர் காவுவண்டி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது கடந்த சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் புங்குடுதீவு திலீபன் மருத்துவசேவை நிலையத்தில் தீவகக்கோட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் இசைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நோயாளர் காவுவண்டியினை திலீபன் மருத்துவசேவைப் பொறுப்பாளர் செ. நாயகன் உத்தியோக பூர்வமாக கையளிக்க. அதனை நிலையத்தின் சிறப்பு மருத்துவப் போராளி நா. வண்ணனும், இந்நிலையத்தின் அபிவிருத்திக் குழுவின் பொருளாளரும் கையேற்றனர். இந்நிகழ்வில் அப்பிரதேச இந்துமதகுரு, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், போராளிகள், மருத்துவசேவைத் தொண்டர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## மக்களின் முறைப்பாடுகளை ஏற்க யாழ். பொலிஸ்நிலையம் மறுப்பு

குடாநாட்டு மக்களிடமிருந்து முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை யாழ். பொலிஸ் நிலையம் இடைநிறுத்தியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இணுவில் பகுதியில் சிறிலங்கா பொலிஸ் உதவி அத்தியட்சகர் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்தே குடாநாட்டு பொலிஸ் நிலையம் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

தமது சொந்தப் பிரச்சினைகள் மற்றும் பிணக்குகள் குறித்து முறைப்பாடு செய்வதற்கு குடாநாட்டு பொலிஸ் நிலையத்திற்கு சென்ற பொதுமக்களை முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளாமலேயே திருப்பி அனுப்பி வருகின்றனர். இச்செயற்பாடு கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

## பிரதான நகரங்களின் வடிகால்களை புனரமைக்க யுனிசெப் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதான நகரங்களின் கழிவுநீர் வடிகால்களை புனரமைத்துக் கொடுப்பதற்கு யுனிசெப் முன்வந்துள்ளது.

இதற்கான உறுதி மொழியை யுனிசெப் அமைப்பின் அதிகாரிகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேசிடம் வழங்கியுள்ளனர்.

அந்தவகையில் யாழ்.நகரம் தவிர்ந்த சுன்னாகம், வல்வெட்டித்துறை,நெல்லியடி, பருத்தித்துறை போன்ற பிரதான நகரங்களின் கழிவுநீர் வடிகால்களை புனரமைத்துக்கொடுக்க யுனிசெப் முன்வந்துள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கூறினார்.

இந் நகரில் காணப்படும் பிரதானமான வடிகால்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றதனால் இவற்றுள் கழிவுநீர் தேங்கி பல சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தி வருகின்றது.

இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கவனத்தில் கொண்டே இவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

## பழம்பொருள் பண்பாட்டு அம்சங்கள் அழிவடையாது காக்கப்பட வேண்டும்

**-மாநகரசபை ஆணையாளர்**

(யாழ்ப்பாணம்)

தமிழர் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்துகின்ற பழம்பொருள் பண்பாட்டு அம்சங்கள் அழிவடையாது பாதுகாக்கப்பட வேண்டும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலம் தொட்டு இன்றுவரை மன்னர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்கள் என்பதைபுலப்படுத்துகின்ற வரலாற்றுச் சான்றுகள் பராமரிப்பு அற்ற நிலையில் அழிவடைந்து செல்லக்கூடிய நிலை காணப் படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் காணப்பட்டஜமுனா ஏரி வல்வெட்டித் துறையில் உள்ள நிலக்கீழ் சுரங்கம், நெடுந்தீவில்உள்ள கடல்அரண்மனை போன்ற பல பழமைவாய்ந்த அம்சங்கள் அழிவடைந்து செல்லும் நிலை காணப்படுகின்றதாக கலாநிதி குணராசா தெரிவித்தார். (கி)

## நயினாதீவில் குடிநீர் பிரச்சினை: தீர்க்கும்படி அரச அதிபரிடம் கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவுப் பகுதியில் பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கு யாழ். மாவட்ட அரசஅதிபர் கவனம் செலுத்த வேண்டும் என நயினாதீவு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இங்கு நன்நீரை பெறுவதற்கு பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். அத்துடன் வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு வெளி மாவட்டத்திலிருந்து பெருமளவான மக்கள் பிரயாணம் செய்வதுடன், சுற்றுலாப் பயணிகளும் இப் பிரதேசத்திற்கு பயணம் செய்கி ன்றனர்.

இவர்கள் அனைவருக்குமான குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இங்குள்ள பொது அமைப்புக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

இங்கு எதிர் நோக்கப்படும் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக யாழ். அரச அதிபரிடம் பொது அமைப்புக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் அரச அதிபர் தீவிரகவனம்செலுத்தி இப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தீவகத்திற்கு வலுக்குறைந்த மின்சாரம்; பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மின்மாற்றிகள் போதாமை காரணமாக யாழ்.தீவகத்தின் பல பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப்படும் மின்சாரம் வலுக்குறைந்ததாகக்காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்.தீவகத்திலுள்ள மின் விநியோகப்பாதைகளில் பொருத்துவதற்கு போதியளவு மின்மாற்றிகள் இல்லாததினால் மின்மாற்றிகள் பொருத்தப்பட வேண்டிய அவசியம் உள்ள பல இடங்களில் மின் மாற்றிகள் பொருத்தப்படாதுள்ளன.

இதனால் மின் விநியோகம் சீராக இடம்பெறாது தூர அதிகரிப்புக்கு ஏற்ப மின்னோட்டம் வலுக்குறைந்து செல்கிறது.

இதனால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை சந்திக்கின்றனர்.குறிப்பாக மின்குமிழ்கள் வலுக்குறைந்து ஒளிர்வதுடன் மின்சாதனங்களும் பழுதடைந்து போகின்றன. இதுகுறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

### பெற்றுக்கொள்ளவும்

கதிரேசு யோகேஸ்வரராஸ் மீசாலை தெற்கு சாவகச்சேரி என்பவரது தேசிய அடையாளஅட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் கிளிநொச்சி பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

## துரிதகாசோலை தீர்வை இவ்வருட இறுதிக்குள் அமுல்

(வலி.மேற்கு)

இலங்கை மத்திய வங்கி இவ்வருட இறுதிக்குள் புதிய நிழல்பட காசோலைகளை அடிப்படையாகக் கொண்ட துரித காசோலைத்தீர்வை ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த துரித நவீன காசோலைத் தீர்வை முறையில் சகல வங்கிகளும் இணைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் புதிய நிழல்பட காசோலைத் தீர்வை முறையின் நோக்கம் தீர்வைக்கு அனுப்பப்படும் காசோலைகள் தொடர்பான கொடுப்பனவுகளை வெகுவிரைவில் தீர்த்து வைப்பதாகும். இம்முறையூடாக நாடு பூராகவும் உள்ள வங்கிகளில் ஒரே கால அளவுக்குள் காசோலைகளை தீர்வை செய்யும்முறை ஒன்றை ஏற்படுத்தவும் அதற்கூடாக வங்கிகளில் செயல்திறன் மிக்க காசோலைத் தீர்வையை மேற்கெள்ளவும் நடவடிக்கை எடுப்பதாகும்.

நாடெங்கிலுமுள்ள வங்கிகளில் வெவ்வேறு அளவுகளில் புழக்கத்திலுள்ள காசோலைகளைத் தவிர்த்து -புதிய நிழல்பட தீர்வை முறைக்கு ஏற்றதான காசோலைகளை அறிமுகம் செய்துவைப்பதாகும் என்றும் மத்திய வங்கி அறிவித்துள்ளது. (37)

## தெய்வீக இசையரங்கு

(வலி.மேற்கு)

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன்-நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் "தெய்வீக இசையரங்கு " நிகழ்வை நடாத்தவுள்ளது.

இத் தெய்வீக இசையரங்கு நல்லூர் முருகன் கொடியேற்ற தினமான இன்று முதல் செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதி வரையான 27 நாட்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றது. தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடைபெறவுள்ளது.

## குருவளை அகதிமுகாம் மக்களுக்கு 68 வீடுகள் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கு குருவளை அகதிமுகாமில் வாழும் மக்களுக்காக அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதுவரலாயம் வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலய கெடுபிடிகளால் மீளக்குடியமர முடியாத நிலையில் குருவளை அகதிமுகாமில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து வரும் மக்களுக்காகவே இவ் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அந்த வகையில் குருவளை அகதிமுகாமில் ஐக்கியநாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதுவராலயத்தால் 68 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் முரளிதரன் கூறினார்.

இந்த வீடமைப்பு திட்டத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (33)

## தொழில் உரிமை மீறல்கள் குறித்து தொழில் திணைக்களத்தில் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்)

தொழில் வழங்குனர்களினால் ஏற்படுத்தப்படும் தொழில் உரிமை மீறல்கள் குறித்து பாதிக்கப்படும் தொழிலாளர்கள் யாழ்.மாவட்டத் தொழில் திணைக்களத்தில் முறையீடு செய்யலாம் என யாழ்.மாவட்ட தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களது கொடுப்பனவு மற்றும் விடுமுறை ஓய்வுச்சலுகைகள் உள்ளிட்ட பல விடயங்களில் தொழில் வழங்குனர்களால் பல்வேறு உரிமை மீறல்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

எனினும் தம்மீதான உரிமை மீறல்கள் பற்றி முறையிட்டு சரியான தீர்வினைப்பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் தெரியாது பல தனியார் நிறுவன ஊழியர்கள் தவிக்கின்றனர்.

எனவே இவ்வாறான தொழில் உரிமை மீறல்களுக்கான தீர்வினை பெறவிரும்புவோர் தமது குறைபாடுகள் பற்றி யாழ்.மாவட்ட தொழில்திணைக்களத்தில் முறையிட்டால் சரியான தீர்வுகளைப் பெற சகல ஏற்பாடுகளையும் தொழில் திணைக்களம் மேற்கொள்ளும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். 33)

## பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் சிறைக் காவலர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாக சிறைச்சாலை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனால் இங்குள்ள பல நிர்வாகச் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (33)

# யுத்த நிறுத்தம் மட்டும்தான் தமிழர்களின் பிரச்சினையல்ல!

இனப்பிரச்சினை விடயத்தில் இன்று பேசப்படுவதாகவுள்ள ஒரே விடயம் யுத்தநிறுத்தம் பற்றியதாகவே உள்ளது. ஒரு புறத்தில் யுத்தநிறுத்தம் பேணப்படுதல் வேண்டும் என்றும், இன்னொரு புறத்தில் யுத்த நிறுத்தத்தில் சில மாறுதல்கள் செய்யப்படுதல் வேண்டும் என்ற பேச்சுக்களே முக்கியமாக இடம்பெறுபவையாகவுள்ளன.

மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இடையிடையே அச்சுறுத்தல்கள், மீறல்கள் என்பனவற்றைச் சந்தித்தபோதும் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவதாகவே உள்ளது. அதாவது அரசு விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒரு நிழல் யுத்தத்தை நடத்தி வருகின்றபோதும் யுத்தநிறுத்தம் இன்னமும் முறிவடையாமல் நீடித்துச்செல்வதாக உள்ளது.

யுத்தமும், அதன் பின்னான யுத்தநிறுத்தமும் இனப்பிரச்சினை தொடர்பானவை. அதாவது இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை பேச்சுவார்தை மூலம் சிறிலங்கா அரசாங்கம் காண முற்படாத நிலையில் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண முனைந்ததினால் யுத்தம் மூண்டது.

அதன் தொடராக நீடித்த கடும் யுத்தத்தின் பின்னர் சிறிலங்கா அரசு இராணுவ ரீதியில் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்த நிலையில் யுத்த நிறுத்தம் சர்வதேச நாடுகளின், குறிப்பாக நோர்வே அரசின் அனுசரணையுடன் கையொப்பமாகியது. இவ் உடன்பாட்டின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக இருந்தது.

ஆனால் மூன்றரை ஆண்டு காலம் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு முடிவடைந்துள்ள நிலையிலும் யுத்த நிறுத்தம் பற்றிப் பேசுவதிலேயே சிறிலங்கா அரசு அக்கறையாகவுள்ளது. அதற்கப்பால் எந்தவித முயற்சிகளையும் அது மேற்கொள்ளத்தயாராக இல்லை. சுருக்கமாகக் கூறுவதானால் யுத்த நிறுத்தம் ஒன்றே போதுமானது. வேறு எதுவும் தேவையற்றது என்பது போன்றுள்ளது சிறிலங்கா அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள்.

யுத்த நிறுத்த உடன்பாட்டில் முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கையொப்பம் இட்டதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள், அரசியல் தீர்வு என்பன தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை வெற்றி பெறவில்லை. அதனால் இழுபறி நிலை அடைந்த அரசியல்தீர்வு முயற்சிகள் சனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட ஆட்சிக்கவிழ்ப்பைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை மூலமான அரசியல்தீர்வு முயற்சிகள் முற்றாக முடக்கத்திற்கு உள்ளாகின. ஆயினும், யுத்த நிறுத்தத்தை முறித்துக்கொள்வதற்கு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஆரம்பத்தில் கடுமையாக விமர்சித்த சனாதிபதி சந்திரிகா தமைலையிலான அரசாங்கமும் விரும்பவில்லை.

இது கூட யுத்தம் நடத்துவதில் தேசத்திற்குப் பேரழிவு ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினால் அல்ல. யுத்தம் ஒன்று மூளுமானால் சர்வதேச நாடுகளில் கிடைக்கக் கூடிய நிதியுதவி தடைப்பட்டுவிடும். இதனால் ஆட்சியை நடத்த முடியாது போய்விடும் என்பதோடு அதிகாரத்துடன் கூடியதான சுகபோக வாழ்வு கேள்விக்குள்ளாகிவிடும் என்பதே யுத்தத்தை ஆரம்பிக்காமைக்குக் காரணமாகும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டைப் பொறுத்து சிறிலங்கா ஆட்சியாளர்கள் அவ் உடன்படிக்கையிலுள்ள பல சரத்துக்களை இன்னமும் நிறைவேற்றியதாக இல்லை. குறிப்பாக மக்கள் தமது சொந்த வீடுகளில் குடியேற சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு அனுமதிக்கவில்லை. இது ஒரு அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும்.

அடுத்ததாக உடன்பாட்டின்படி தமிழ்க் குழுக்களிடம் இருந்து களையப்பட வேண்டிய ஆயுதங்களை இன்னமும் அரசாங்கம் களையவில்லை. மாறாக இவ் ஆயுதக்குழுக்களைப் போசித்துவருவதோடு, அவர்கள் பெயரில் நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் ஓர் உடன்பாட்டு விதி மீறலாகும். இதனை அமெரிக்கா தொடக்கம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவரை வெளிப்படுத்தாமலும் இல்லை..

இந்த வகையில் பார்க்கையில் யுத்தநிறுத்த உடன்பாட்டிலும் பல சரத்துக் களையும் நிறைவு செய்யாத அரசாங்கம் இதற்கு மாறாக மீண்டும் முழு அளவில் யுத்தம் தொடங்கிவிடக்கூடாது என்பதில் அக்கறையாக உள்ளது. அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டை முழு அளவில் அமுல் செய்வதிலோ அன்றி யுத்தநிறுத்த உடன்பாட்டை வாய்ப்பாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலோ அக்கறை காட்டாத சிறிலங்கா அரசு, யுத்த நிறுத்தம் முறிவடைவதை மட்டும் விரும்பவில்லை.



அவ்வாறு முடிவடைந்தால் அது விடுதலைப்புலிகளால் முறிவடைய வேண்டும் என்று அரசு விரும்புகின்றது. அவ்வாறானதொரு நிகழ்வு தமக்கு பாதகமானதாகமாட்டாது என்பது அதன் நிலைப்பாடாகவுள்ளது. அதாவது, சர்வதேசத்தின் கண்டனத்திற்கு உள்ளாகாமல் அதேவேளை, சர்வதேச உதவிகளைப் பெற்று யுத்தத்தை நடத்தலாம் என அது கருதுகின்றது.

அவ்வாறு இல்லாதுவிடில் இனப்பிரச்சினை, அரசியல் தீர்வு விவகாரம். சுனாமி அனர்த்த உதவி நிதி முகாமைத்துவம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு விடயங்களில் அரசாங்கம் முன்னேற்றகரமான முயற்சிகள் மேற்கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் இவற்றிக்கு மாறான வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. அது மட்டுமன்றி அரசாங்கம் அடுத்த தலையாய பிரச்சினையாக தேர்தல்களையே நோக்குகின்றது.

சுருக்கமாகக் கூறுவதானால் பெரும் மோதல்களைத் தடுப்பதற்கான யுத்த நிறுத்தத்தைத் தவிர வேறு பிரச்சினைகள் அனைத்துமே சிங்கள ஆட்சியாளர்களுக்கு இரண்டாம் தரப்பிரச்சினையாகிவிட்டது அவர்களைப் பொறுத்து தற்பொழுது அடுத்து வரப்போகும் தேர்தல்களே முக்கியமான விடயமாகியுள்ளது.

அரசாங்கம் இனப்பிரச்சினை விவகாரத்திலோ அன்றிப் பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலோ அக்கறையற்று உள்ளது என்பதற்குக் கடந்த காலத்தில் நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் எந்தவித அர்த்தமும் அற்றதாக முடிவடைந்துள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும். அதாவது இவ்விஜயத்தின் மூலம் விதார் ஹெல்கேசன் தனது நோக்கத்தை விரயமாக்கியதே நடந்தது.

அதாவது வடக்கு-கிழக்கில் பல்வேறு காரணங்களினால் — திருமலை புத்தர்சிலை விவகாரம், திருமலையில் போராளிகள் மீதான தாக்குதல், மட்டக்களப்பில் புலிகளின் காரியாலயங்கள் மீதான தாக்குதல்கள், யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் மீதான துப்பாக்கிச் சூடு போன்ற பல்வேறு விடயங்களினால்— பதற்றநிலை அதிகரித்துள்ளபோதும் விதார் ஹெல்கேசனால் இதனைத் தணிப்பதற்கான முயற்சிகள் கூட மேற்கொள்ள முடியாது நாடு திரும்ப வேண்டியதாகியது.



இதேவேளை தனியாக ஆயினும் சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஆளும் கூட்டணி மட்டும்தான் சமாதான விடயத்திலும், பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் அக்கறையற்று இருப்பதாகக் கொண்டுவிட முடியாது. பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே. கட்சியும் இத்தகையதொரு நிலைப்பாட்டுடன் இருப்பதாகவே கொள்ளமுடியும்.

எடுத்துக்காட்டாக பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஐ.தே.கட்சி நடந்துகொண்ட விதத்தைக் குறிப்பிட முடியும். பொதுக் கட்டமைப்பிற்கு எதிராகப் பிரச்சாரத்தில் அது இறங்கவில்லையே ஒழிய பொதுக்கட்டமைப்பை அது ஆதரிக்கவில்லை. பொதுக்கட்டமைப்பு அமுலாக்கத்திற்கு இடையூறு விளைவிக்கும் நடவடிக்கையிலேயே அது கவனம் செலுத்தியது.

இது ஒரு புறமிருக்க, அடுத்த சனாதிபதித்தேர்தலிலோ அன்றி பொதுத்தேர்தலிலோ விலைவாசி ஏற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை அடிப்படையாக வைத்தே, தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம் பொதுக்கட்டமைப்பு, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்பன ஐ.தே.க விற்கும் இரண்டாம் பட்சமாகியுள்ளன.

அதாவது சிறிலங்கா ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகயும் யுத்தநிறுத்தம் என்பதில் மட்டுமே அக்கறை கொண்டவையாக உள்ளன. யுத்தநிறுத்தத்தைப் பேணுவதன் மூலம் பெரும் மோதல்கள் அற்றதொரு சூழ்நிலையில் தமது அதிகாரப் போட்டியில் ஈடுபடலாம் என்பதே அவர்களின் முடிவாக உள்ளது.

எதிலுமே இணக்கப்பாடானதொரு போக்கைக் கடைப்பிடிக்காத சிங்கள அரசியல்வாதிகள், யுத்தநிறுத்த விடயத்தில் மட்டும் ஒன்றை ஒத்த கருத்தாகக் கொண்டவர்களாக உள்ளனர். அவ்வாறு இல்லாதுவிடில், அடுத்த சனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்கவும், மகிந்த ராஜபக்ஷவும் யுத்தநிறுத்தம் தொடர்பாக பொதுவான பிரகடனம் ஒன்று தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வரும் அளவில் ஒத்த கருத்திற்குச் சென்றிருக்க மாட்டார்கள்.

இந்த வகையில் சிறிலங்காவின் இரண்டு பிரதான கட்சிகளும் இன்று ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ள ஒரு விடயமாகவுள்ள விடயம் யுத்தநிறுத்தத்தைப் பேணுதல் என்பதே. ஆனால், அதன் எல்லை கூட நிர்ணயிக்கப்பட்டதாகவே உள்ளது. அதாவது பெரும் மோதலைத் தவிர்த்தலே ஒழிய, அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுல்படுத்துதல் என்பதல்ல.

இத்தகையதொரு முடிவுக்கு விடுதலைப்புலிகள் யுத்தத்தை இனி ஆரம்பிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை காரணமாக இருக்கலாம். பொதுத்தேர்தலோ அன்றி சனாதிபதித்தேர்தலோ எதுவாகிலும் இனப்பிரச் சினைத் தீர்வு தொடர்பான விவகாரத்தைக் கையில் எடுப்பது தமக்குத் தேர்தலில் பாதகமானதாக அமையலாம் என இவர்கள் நம்புவதாகவும் இருக்கலாம்.

அதாவது சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகள் நிர்ப்பந்தங்கள் என்பனவற்றை மீறி விடுதலைப்புலிகள்யுத்தம் ஒன்றிற்குச் செல்லப்போவதில்லை, அன்றி விடுதலைப் புலிகள்யுத்தம் செய்யும்அளவிற்கு இன்று பலமாக இல்லை என்பது அவர்களின் நம்பிக்கையாக இருக்கலாம்.

அடுத்து பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு மீண்டும் உருவேற்றும் முயற்சியில் ஜே.வி.பி. ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் இடையில் ஒரு போட்டியே இடம் பெற்று வருகிறது. இந்நிலையில் இனப் பிரச்சினை தொடர்பாகப்பேசப்படும் எந்த விடயமும் தமக்குப் பாதகம்ாக அமையாலாம் என ஆட்சி அதிகாரத்திற்குப் போட்டியிடும் அவ்விரண்டு பிரதான கட்சிகளும் நம்பிக்கைகளைக்கொண்டிருக்கலாம்.

போர்ச்சூழல் மறந்து சுமார் மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் சிங்கள மக்களும் போரின் பாதிப்புக்களில் இருந்து விடுக்கப்பட்டிருக்கலாம் அன்றி மறந்திருக்கலாம். இந்த நிலையில், ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றின் பிரச்சாரங்கள் தேர்தல்களை எதிர்நோக்கியுள்ள பிரதான கட்சிகளின் வாக்கு வங்கிகளைப் பாதிப்பிற்குள்ளாக்கும் வாப்புக்களும் உண்டு.

இத்தகையதொரு நிலையில் யுத்தநிறுத்தத்திற்கு அப்பால் சமாதான முயற்சிகளை முதன்மைப்படுத்ததுவது பாதிப்பை ஏற்படுத்திவிடலாம் என்ற நிலையில் பிரதான கட்சிகள் அவை குறித்துப் பேசுவதைத் தவிர்த்துவரலாம். ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு யுத்த நிறுத்த உடன்பாடு என்பதல்ல.

இனப்பிரச்சினையே யுத்தத்தைக் கொண்டு வந்தது. ஆகையினால், இனப்பிரச்சினைக்கான தீர்வே யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வரத்தக்கதாகும். அதாவது யுத்தநிறுத்தம் நிலையானதாக வேண்டுமானால்யுத்த நிறுத்த உ[illegible]ாட்டில் செய்யப்படும் மாற்றம் அல்ல. இனப்[illegible]னைக்குத் தீர்வே அவசியமான [illegible]ம் [illegible]வ்வாறு இல்லாதுவிடில் நீண்ட க[illegible] யுத்த நிறுத்தம் தாக்குப்பிடிப்பது [illegible]ாசாகவே இருக்கும்.

— — — — — — — — — ஜெயராஜ்




**01.08.2005**
**07.08.2005**

### 01

→மட்டக்களப்பு சின்ன ஊறணியிலுள்ள மதுபானக்கடையொன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் மதுபானக்கடை ஊழியர் ஒருவர் மரணம்.

→அம்பாறை மாவட்டம் விநாயகபுர முதலாம் பிரிவு மக்கள் சுனாமி நிவாரண கொடுப்பனவுகள் கிடைக்கவில்லையெனக் கண்டித்து திருக்கோவில் பிரதேசச்செயலர் பிரிவின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

→கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் கட்டப்பட்டிருந்த மதில் சுவர் இடிந்து விழுந்ததில் ஒன்றரை வயதுச் சிறுமி பரிதாபமரணம்.

### 02

→வவுனியா எழுச்சி மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைக்கோரி மட்டக்களப்பு நகரில் மாபெரும் தேசிய எழுச்சி மாநாடு மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.



→ மட்டக்களப்பில் தமிழ்த் தேசியஎழுச்சி மாநாடு இடம்பெற்ற மைதானத்திற்கு அருகில் படையினர் மற்றும் தேசவிரோதிகள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர்.

→பொலநறுவ வெலிக்கந்தவில் முன்னாள் ஊர்காவல் படைச்சிப்பாயொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

→திருகோணமலை மாவட்டம், புல்மோட்டை முதலாம், இரண்டாம் வட்டாரங்களில் சிறிலங்காப்படையினர் முழுமையான சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர்.


→ மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நான்குபேர் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது.

→ வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஊர்காவல் படைச்சிப்பாய் ஒருவர் காயம்.

→மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரியின் விடுதிப்பகுதியிலிருந்து 20 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் மீட்பு.

### 03

→ வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் எடுக்கப்பட்டதீர்மானங்களை வலியுறுத்தி கிளிநொச்சியில் மாவட்ட ரீதியாக மக்கள் எழுச்சி நிகழ்வுகள் செப்ரெம்பர் முதலாம் திகதி நடத்தப்படவுள்ளமைக்கான முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று கிளி. அரசசார்பற்ற நிறுவன இணைய மண்டபத்தில் இடம்பெற்றது.



→ இந்தவருட இறுதிக்குள் சனாதிபதித் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடக்கோரி உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

→ விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் பதுளை ,ஹாலி- எல பகுதியில் எட்டுத் தமிழ் இளைஞர்கள் சிறிலங்காப் பொலிசாரால் கைது.

### 04

→ யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவில் சந்திப்பகுதியில் சிறிலங்கா இராணுவச்சிப்பாய் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிகையலங்கார தொழிலாளி ஒருவர் பலி, மேலும் ஒருவர் படுகாயம்.



→யாழ்ப்பாணம் இணுவில் கந்தசுவாமி கோவில் சந்தியில் துப்பாக்கிச்சூடு நடத்திய சிப்பாய் சிறிலங்காப் பொலிசாரால் கைது.

→நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்தார்.

→ கொழும்பு வந்த விதார் ஹெல்கேசன் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பேச்சு.


→ இணுவிலில் சிகையலங்காரத் தொழிலாளி ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த இளைஞர்கள் யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்த்தனவை கடத்திச்சென்று கொலை.



→ கொழும்பு நாரஹேன்பிட்டி பார்க் வீயில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில் குண்டு வெப்பு.

### 05

→ தென்னிலங்கைத் தலைமையோ, சிங்கள தேசமோ தமிழ் மக்களுக்கும், தேசத்திற்கும் ஒரு தீர்வைத்தரும் என்பதை எங்கள் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியிருக்கின்றது. சர்வதேச பிரசன்னத்தின் அடிப்படையில் அவர்களின் முயற்சியில் கூட சிங்களத் தலைமைகள் எந்த அக்கறையுமில்லாமல் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படாத நிலை தான் மூன்று வருடங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் நோர்வேக்குழுவினருடனான சந்திப்பில் தெரிவிப்பு.



### 06

→ மட்டக்களப்பு மாவட்டம் சவுக்கடியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை.

→ மட்டக்களப்பு செங்கலடிச் சந்தைக்கட்டடத் தொகுதியிலுள்ள பழக்கடை ஒன்றில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் இருவர் படுகாயம்.

→ கட்டுநாயக்க விமானத்தளத்தின் ஊடாக நிதி மோசடிகளில் ஈடுபட்டுவந்த விமானத்தளத்தின் மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் சுங்கத் துறையினரால் கைது.

→ யாழ்.மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள பொலிசாரை உசார் நிலையில் வைத்திருக்குமாறு யாழ்ப்பாணம் சென்ற சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் சந்திராபெர்ணான்டோ யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களினது பொறுப்பதிகாரிகளுக்கும் பணிப்புரை.

→ யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேயவர்த்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட புலனாய்வுத் துறையினர் அடங்கிய குழு யாழ். விஜயம்.

→ திருகோணமலை நகரில் பேருந்து நிலையம் அருகில் சட்டவிரோதமான முறையில் நிறுவப்பட்ட புத்தர்சிலை விவகாரத்தை அடுத்து நகரில் குவிக்கப்பட்டுள்ள படையினரை அகற்றுவது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு திருகோணமலை தலைமைப் பிரதிநிதி ஆர்தல் ரூவிட்டன். திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவையின் தூதுக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

→ ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்தினூடாக- பயணம் செய்த வனவள பாதுகாப்புப் பணியாளர்கள் மீது இராணுவப் புலனாய்வாளர்கள் தாக்குதல்.

→ நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு மணி நேரம் சந்தித்துப் பேச்சு.

### 07

→ மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லைப்பற வனப்பகுதியில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி.

→ திருகோணமலை கந்தளாயில் அமைந்துள்ள ஜே.வி.பி யின் அலுவலகத்தின் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதில் சிறிலங்காப் பொலிஸ்சார்ஜண்ட் உட்பட இருவர் காயம்.

→ திருகோணமலை நகரில் மடத்தடிச் சந்தியில் காவல்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச்சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

→இணுவில் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டிற்கு பலியான இளைஞனின் இறுதிச்சடங்கில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

→வவுனியா குட்செட் வீதியில் இனந்தெரியாத நபர்களால் ஆயுத முனையில் நபர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். தடுக்கச்சென்ற அவரின் மனைவி வாளால் வெட்டப்பட்டு காயம்.

→தென்மராட்சி நுணாவில் பகுதியில் மதிவெடிவெடித்தில் ஒருவர் பலி.

→இலங்கைக்கு நான்கு நாள் விஜயமாக வந்த நோர்வே பிரதிதுனை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் ஒஸ்லோ பயணம்.

# சிலோன்-அமெரிக்கன் மிஷன் நிரந்தர வீடுகள் கையளிப்பு

அம்பாறை மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் தமது இருப்பிடங்களை இழந்த குடும்பங்களுக்கு முதன் முதலில் "சிலோன்-அமெரிக்கன் மிஷன்"நேற்று முன்தினம் 40 நிரந்தர வீடுகளை வைபவ ரீதியாக கையளித்துள்ளது.

இம் மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் சுமார் 12 ஆயிரம் வீடுகள் முற்றாக அழிந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

தென்னிந்திய திருச்சபையான"சிலோன்-அமெரிக்கன் மிஷன்" அம்பாறை மாவட்டத்தில் 325 வீடுகளைப் புதிதாக தலா ஐந்து இலட்சம் ரூபா செலவில் அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

நாற்பது வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கும் வைபவம் மேற்படி சபையின் கிழக்குப் பிராந்திய குரு அருட்திரு கலாநிதி எஸ்.ஜெயநேசன் தலைமையில் நடைபெற்றது.

நெதர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் "சிலோன் கிறிஸ்ரியன் கெயர் பவுண்டேசன்" பிரதிநிதிகளான ஹேமன் வன்டீர் வீட் மற்றும் விஜ்ப்ரேன், ஜோன்க்ஸ்மா ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேற்று முன்தின நிகழ்வில் குறிப்பாக ஆழிப் பேரலையினால் தரைமட்டமாகிய ஹேமன் சிறுமியர் இல்லமும் புதிய இடமொன்றில் அமைக்கப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கிழக்கு பிராந்திய குரு அருட்திரு கலாநிதி எஸ்.ஜெயநேசன் 325 நிரந்தர வீடுகளை அம்பாறை மாவட்டத்தில் அமைப்பதற்கு தாம் உத்தேசித்துள்ளதாகவும், அறுபது வீடுகளை அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

# அடிக்கல் நாட்டல்

நெடுங்கேணி வேலன்குளத்தில் முன் பள்ளிக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

நேற்று முன்தினம் வவுனியா வடக்கு வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் இணைப்பாளர் செல்வி.மெற்றில்டா தலைமையில் இடம்பெற்றது.

இதில் தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கொடி என்பன ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் முன்பள்ளிச் சிறார்களுக்கான கற்றல் உபகரணங்களை த.பு.கழகத்தின் டென்மார்க் கிளையினர் வழங்கினர்.

**- சிறிலங்கா நீதிமன்றங்களில் -**

# போலி இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கைகள் சமர்ப்பிப்பு

இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தினால் வெளியிடப்படுவது போன்று போலியான அறிக்கைகளை தயாரித்து பெரும் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களின் சார்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் பற்றி தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு நீதிமன்றத் தொகுதியில் நீதவான்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற அதிகாரிகளுக்கிடையே இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள் வைத்திருத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்காக கைது செய்யப்படும் சந்தேக நபர்கள் சார்பில் இவ்வாறு போலி இரசாயன பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் வெளியிடுவதைப் போன்றே அதன் அதிகாரியின் கையெழுத்துடன் இந்த அறிக்கைகள் வெளியிடப்படுவதாக இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உதவி இரசாயன பரிசோதகர் தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டு மற்றும் ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதானவர்களிடமிருந்து கைப்பற்றப்படும் பொருட்கள் இரசாயன பகுப்பாய்வுத் திணைக்கள அலுமாரியில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கையில் அவற்றை பரிசோதனை செய்யாது அவற்றிற்கான இரசாயன பரிசோதனை அறிக்கைகள் வெளியிடப்படுவதாக உதவி இரசாயன பரிசோதகர் கூறியுள்ளார்.

கடந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் இவ்வாறான 12 அறிக்கைகள் நாட்டின் பல நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் உதவி இரசாயன பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் 50 ஆவது ஆண்டு

## பொன்விழா சிறப்பிதழ்

10-08-2005




### மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் வளர்த்தெடுத்த கல்லூரி

யுத்த நடவடிக்கைகளால் பல நெருக்கடிகளைச் சந்தித்த போதும் புகலிடம் தேடி வந்தவர்களை அரவணைத்தும், அயராது கல்வியறிவூட்டியும் பல கற்றறிந்தோரை உருவாக்கி, தாயகத்தில் மட்டுமன்றி உலகெங்கணும் புகழ் பரப்பி வந்துள்ளது. மொழிப்பற்றுடன் நாட்டுப்பற்றையும் வளர்த்தெடுத்த இக்கல்லூரியிலிருந்து விடுதலைப் போராட்டத்தில் இணைந்து மாணவர்கள் பலர் மாவீரர்களாய் உயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்லூரியின் பொன்விழா சிறப்புற அமைய மனதார வாழ்த்துகின்றேன்.

*வெ. இளங்குமரன்,*
*பொறுப்பாளர்,*
*தமிழீழக் கல்விக்கழகம்.*

### கல்வியொளி ஏற்றிவர வேண்டும்

சிறிய பாடசாலையாக ஆரம்பித்த மத்திய கல்லூரி, கல்லூரிச் செயற்பாட்டிலும், கலை, பண்பாட்டு, விளையாட்டுத் துறையிலும் அபிவிருத்தி கண்டதன் மூலம் கொண்டாடப்படும் இப்பொன்விழா நிகழ்வுகள் அர்த்தமுள்ளதாகவும் கல்வி எழுச்சியூட்டுவனவாகவும் அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

இ.விசாகலிங்கம்,
மாகாணக்கல்விப்பணிப்பாளர்,
திருகோணமலை.

### அதிபரின் ஆசிச்செய்தி

**"அடம்பன் கொடியும் திரண்டால மிடுக்கு"**

1955 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி பல இடப்பெயர்வுகளையும், இடையூறுகளையும் சந்தித்தபோதும் மிகக்குறுகிய காலத்தில் பொன்விழாக் காணுகின்றதெனின் அதற்கு வழிசமைத்த ஆசிரியர்கள், மாணவ்கள்,பெற்றோர்கள், பழையமாணவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், உதவிவழங்கும் நிறுவனங்கள் ஆகிய அனைவரினதும் ஒத்துழைப்பே காரணமாகும். மேலும் புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள் கல்லூரியின் வளர்ச்சியிலே பெரும்பங்காற்றி வருகின்றார்கள் என்பதை பெருமையுடன் கூறி அவர்களது ஒத்துழைப்பு என்றும் நிலைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்..

*பெ.க.சிவலிங்கம்.*
*அதிபர்,*
*புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி,*

### வாழ்த்துப் பாமாலை

*பொன்விழாக் காணுகின்ற புதுநகர் கல்லூரியே!*
*புகழ்பரப்பி நின்சேவை பொலிந்திடுக! பூமிதனில்.*
*அறிவொளி பரப்புகின்ற ஆலயமாம் கல்லூரியே*
*அன்புடன் வாழ்த்துகின்றேன். அகமகிழ்ந்து*
*வழங்குகின்றேன் நன்னெறிகள் பலவற்றை நகர்வாழ*
*எடுத்தியம்பும்முன்னோர்கள் சிந்தையினில் முழுமதியாய்*
*நிற்கின்றாய் உன்னருமைப் புதல்வர்கள்*
*உலகினுக்கோர் வழிகாட்டி என்னிதய*
*வாழ்த்துக்கள் என்றும் நீ வாழியவே!*

*திருமதி.கு. சிவசுந்தரம்.*
*பிரதி அதிபர்,*
*மத்தியகல்லூரி.*

### சோதனைகளை வென்று சாதனை கண்டபடைத்த கல்லூரி

மத்திய கல்லூரி போர்வடுக்களைத் தன்னுடன் சுமந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற போதும் சோதனைகளை வென்று பல சாதனைகளைப் படைத்த தன்பேரில் பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. இப்பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

செ.பாலராசா.
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

### பொன்விழாக் காணும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

*ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் அச்சமூகத்தில்இயங்கும் கல்விக்கூடங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஓர் இனத்தின் தனித்துவம், பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப்பாதுகாப்பதுடன் அவ்வினத்தின் தேசியத்தைக் கட்டி வளர்ப்பதிலும் பாடசாலைக்கு முக்கிய பங்குண்டு. இவை வெற்றிகரமாக நிறைவேற்றுகின்ற போது அவை சமூகத்தால் மதிக்கப்படும் என்பதற்கமைய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதற்கு பொருந்துவதாகவும் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றது. ஐம்பது அகவையைப் பூர்த்தி செய்து பொன் விழாவைக் கொண்டாடும் எமது கல்லூரிக்கு பெருமையையும் சிறப்பையும்பெற்றுத் தந்தவர்கள் இவ் வேளையில் நினைவு கூரத்தக்கவர்கள். அந்த வகையில் இப்பாடசாலையை ஆரம்பிக்க காரணமாக இருந்த சைவவித்தியா விருத்திச்சங்கமும் அதன் முகாமையாளருமான அமரர் இராசத்தினம், தாபகராகவும், முதல் அதிபராகவும் திகழ்ந்த அமரர். மு. நேசரத்தினம் ஆகியோர் என்றும் மறக்கப்பட முடியாதவர்கள். இன்றைய அதிபருக்கு முன்னர் ஒன்பது அதிபர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையால் இக் கல்லூரியைக்கட்டி வளர்த்துள்ளார்கள். அமரர் நேசரத்தினம் அவர்களோடு அமரர்களான பண்டிதர் ஆ. சின்னத்துரை, கு.வி. செல்லத்துரை இப்போதும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற திரு. அ.கா. மகாலிங்கம் ஆகியோர் இக்கல்லூரியின வளர்ச்சியின்முக்கிய கட்டங்களைத்தூக்கிக் கொடுத்த செம்மல்கள். ஆரம்பக் கல்வியென்று தொடங்கி ஐந்து ஆண்டுகளுக்குள்ளேயே க.பொ.த சாதாரணவகுப்பு ஆரம்பித்தமையும் அப்பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்ற வைத்து சாதனை படைத்தமையும் அப்போதைய அதிபர் பண்டிதர் சின்னத்துரை அவர்களால் முடிந்தது. க.பொ.த உயர்தர கலை வகுப்பை ஆரம்பித்து பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுப்புகின்ற மரபு அமரர் கு.வி. செல்லத்துரை அவர்களால் தொடக்கி வைக்கப்படுகின்றது. க.பொ.த உயர்தர விஞ்ஞான வகுப்பு திரு. அ:கா. மகாலிங்கம் அவர்களால் தொடக்கி வைக்கப்படுகின்றது. பொன்விழாக்காணும் இவ் வேளையில் இப்பெருமக்கள் கல்லூரியின் வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகின்றவர்கள். இவர்கள் போன்று உழைத்த அதிபர்கள் , ஆசிரியர்கள், பாராட்டப்படுவதுடன் காணிகளை நல்கி கட்டடங்களைக் கட்டிக்கொடுக்க உதவியவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். பெற்றோர், பழைய மாணவர்கள் என்றும் உறுதுணையாக இருந்து வருபவர்கள். புலம் பெயர்ந்த உறவுகளின்உதவிகள் என்றும் மறக்கப்படாதவை. இவ்வேளை ஐக்கிய ராச்சிய பழைய மாணவர்களால் கட்டித்தரப்பட்ட கலைக்கூடம் அவர் தம் உறவுகளின் உச்சக்கட்டம்.*

**"வாழ்க எம் கல்லூரி, வளர்க பல்லாண்டு"**

*பாடசாலைச் சமூகம்*

### தாய்சேய் உறவைப்பிரதிபலிக்கும கல்லூரி

இக்கல்லூரி பல்வேறு அறிஞர்களை உருவாக்கி, மண்ணுக்கும் கல்விக்கும் ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றியுள்ளது. அதனால் அச்சமூகத்தின் எண்ணத்தின் விளைவே இப்பொன்விழாவாகும். குறிப்பாக புலம் பெயர் வாழ்-பழைய மாணவரின் நிதியுதவியால் கட்டப்படும் கட்டடங்கள் அவர்களது தாய்சேய் உறவைப் பிரதிபலிப்பதாக அமையும்,சிறப்பு வாய்ந்த இக்கல்லூரியின் பொன் விழாவை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

ப. அரியரத்தினம்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

### குன்றின் மேல் தீபம்

சிறிய பாடசாலையாக ஆரம்பித்த எம் கல்லூரி இன்று பல்துறை சார்ந்த விற்பன்னர்களை உருவாக்கி சாதனை படைத்து தன் ஐம்பதில் பொன்விழாக் காணுகின்றது. இத்தருணத்தில்இங்கு கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களை நினைவு கூர்வதுடன் கல்விச் செயற்பாட்டுடன் இணைந்த ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்கி உலகம் போற்ற எம்கல்லூரி வாழ வேண்டி வாழ்த்துகின்றோம்.

பு/மத்திய கல்லூரி,
பழைய மாணவர் ஒன்றியம்,
பிரான்ஸ்.

### "எழுத்தறிவித்தவன் இறைவன்"

போர், பொருளாதாரத்தடை போன்ற நெருக்கடிகள் மத்தியிலும் இப்பாடசாலை செய்த கல்விப்பணி எம்மையெல்லாம் பிரமிக்க வைக்கின்றது. "எழுத்தறிவித்தவன் இறைவன்" இந்த இறைவழி நின்று ஆன்மீகத்திலும் கலை பண்பாட்டிலும் மாணவர்களை வளர்த்தெடுத்த அனைவரையும் பாராட்டுவதுடன் பொன்விழாக்காணும் இக்கல்லூரி வளமுடன் வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

அருட்பணி பா.பி இராசசிங்கம்,
பங்குத்தந்தை, புனித சூசையப்பர் ஆலயம்,புதுக்குடியிருப்பு.

### வன்னித் திருநாட்டின் அரும்பெரும பொக்கிசம்

வன்னித்திருநாட்டில் அரும்பொக்கிசமாய் வாழ்ந்து ஆயிரமாயிரம் மாணவர்க்கு அறிவுக்கண்ணூற்றாகி அளப்பெரிய சேவையாற்றி பொன்விழாக்காணும் எம் கல்லூரியை நினைக்கும் போது மனம் பூரிப்படைகின்றது. கல்லூரியின் கடந்தகால வளர்ச்சியில் பங்குகொண்ட அனைவரையும் நினைவு கூர்ந்து மனித குலம் உள்ளளவும் இம்மண்ணில் தன் மாண்பான சேவையால் நாட்டின் முதன்மைக் கல்லூரியாகத் திகழ வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

பு/மத்திய கல்லூரியின்
பழைய மாணவர் ஒன்றியம்
ஐக்கிய இராச்சியம்.

### உறுதியான கல்விக்கட்டமைப்பை உருவாக்கிய கல்லூரி

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பல இடையூறுகளைச் சந்தித்தபோதும் உறுதியான கல்விக்கட்டமைப்பைப் பேணிக் காத்து இன்றுதனது பொன்விழாவைக் காணுவதையிட்டும், அக்கல்லூரி இன்னும் பல நூற்றாண்டுகளைக் கொண்டாட வேண்டுமெனவும் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்..

இ. தியாகலிங்கம்,
வட-கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
திருகோணமலை.

### "பிச்சைபுகினும் கற்கை நன்றே"

நாம் பெற்ற கல்வியறிவினால்தான் சமூகத்தில் சவால்களை எதிர்கொள்ள முடியும். அவ்வாறான கல்வியறிவை எவ்வாறாயினும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதனை மூதாட்டி எடுத்துரைத்துள்ளார். அவ்வாறான, வாழக்கற்க வேண்டிய அனைத்து அம்சங்களையும் புது. மத்திய கல்லூரி தன் சமூகத்திற்கு ஐம்பது ஆண்டுகளாக வாரி வழங்கி இன்று பொன்விழாக்காணுகின்றது. அத்தகைய நற்பணியாற்றும் கல்லூரியின் பொன்விழாவை வாயார வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி இமெல்டா சுகுமார்,
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு.

### பேரும் புகழும் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் பல இடர்களைச் சந்தித்தபோதும் ஒரு தசாப்த காலமாகத்தான் ஒரு நிரந்தரமான இடத்தில் தன் காலைப் பதித்து படிப்படியாக வளர்ந்து வருகிறது. இக்கல்லூரி பல பேரையும் புகழையும் நிலைநாட்டியுள்ளது. அத்தகைய பேரும் புகழும் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டுவதுடன் பொன்விழாக்காணும் கல்லூரிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

செ. தயானந்தா
உதவி அரசாங்க அதிபர்
புதுக்குடியிருப்பு.

### "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

1955 ஆம் ஆண்டு சைவவித்தியாவிருத்திச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பொன்விழாக் கொண்டாடும் இக்கட்டத்தில் தனது பணியாகிய கல்வியை எதிர்காலச் சமூகத்திற்கு ஏற்றவாறு வழிவகுத்துக் கொடுப்பதுடன், இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தையும் அடைய வேண்டுமென இறைவனை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

பிரம்ம ஸ்ரீ தி.சடாச்சர சர்மா
இந்துமாமன்றம்,
மத்தியகல்லூரி.

### எம்மைப்போல் எமது சந்ததியினரை உருவாக்கட்டும்.

எமது கல்லூரி கல்வி இலக்கு நோக்கி வீறுநடை போடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவர் சங்கத்துடன் கல்லூரியின் பௌதீகவள விருத்தியில் பழைய மாணவர் சங்கம் இணைந்து செயற்படுவதை யாவரும் அறிவர். எம்மைப்போல் எமது சந்ததியினரையும் உருவாக்க வேண்டுமென வேண்டி பொன்விழா நூற்றாண்டுவிழா நோக்கி நகர வாழ்த்துகின்றோம்.

க. பார்த்தீபன்,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

**பொன்விழாக்குழு**


### விளம்பர அனுசரணை

| | | |
|---|---|---|
| கந்தையா விற்பனைக் களஞ்சியம் | (சி.12504) | புதுக்குடியிருப்பு |
| தேவி கட்டடப் பொருட்கள், உதிரிகள் வாணிபம் | (சி.125.05) | புதுக்குடியிருப்பு |
| மதி உணவகம் | (சி.125.06) | புதுக்குடியிருப்பு |
| தெய்வம் வாணிப மாளிகை | (சி.125.07) | புதுக்குடியிருப்பு |
| திருக்குமரன் புடவை மாளிகை | (சி.125.08) | புதுக்குடியிருப்பு |
| அம்மன் வணிக மாளிகை | (சி.125.09) | புதுக்குடியிருப்பு |
| குமரன் உணவகம் | (சி.125.10) | புதுக்குடியிருப்பு |
| திருமகள் அழகுச்சோலை | (சி.125.11) | புதுக்குடியிருப்பு |

## ஒக்ரோபரில் பீகார் தேர்தல்

ஒக்ரோபர் மாதம் பீகார் மாநில தேர்தல் நடக்கலாமென தேர்தல் ஆணையகம் தகவல் தெரிவித்துள் ளது.

பீகார் சட்டமன்றத்தேர்தலில் எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாததால் அங்கு சட்டமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் பீகாரில் புதிதாக தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையகம் அறிவித்திருந் தது.

இந்நிலையில் பீகார் சட்டமன்றம் கலைக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று முன்தினம் உயர் நீதிமன்றில் நடந்த வழக்கு விசாரணையில் மனு தாரர்கள் பீகாரில் புதிய தேர்தலுக் கான ஏற்பாட்டைத் தேர்தல் ஆணை யகம் நிறுத்தவேண்டும். நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தனர்.


## சென்னையில் குண்டுவெடிப்பு

சென்னையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டும், நான்குபேர் படுகாயமடைந்தும் உள் ளனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி தெரியவருகையில்;

இரும்புக் கடை ஒன்றில் பழைய இரும்புப் பொருட்களை உருக்கு கையிலே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது. இவ் இருப்புக்கடையில் பணிபுரிந்த ஒரு வரே இவ் அனர்த்தத்தில் கொல்லப் பட்டவராவார். உருக்குவதற்காக கொண்டுவரப்பட்ட பொருட்களுக்குள் ளேயே மேற்படி குண்டு இருந்ததாகத் தெரியவருகிறது.

## இரண்டாம் ஆண்டு திருமண நிறைவு நாள் வாழ்த்து



சுதன்-கோகிலா 10.08.2005

சுதன் கோகிலா தம்பதியினர் தமது இரண்டாவது திருமண நிறைவு நாளை லண்டனில் சந்தோசமாகக் கொண்டாடுகின்றனர். இவர்களைப் பதினாறு செல்வங்களும் பெற்று பெரு வாழ்வு வாழ வேண்டுமென வாழ்த்துவதோடு, இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்களையும் நண்பர்களையும் அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

வாழ்க பல்லாண்டு கல்யாண
வாழ்க்கை நூறாண்டு... (6525)

தகவல்: மருமகள் சி. றெசிந்தா
"றெசிவாசா"
சங்கத்தார் வயல்,
இயக்கச்சி

உங்கள் நல்வரவை விரும்பும்
க. பொன்னுத்துரை
குடும்பத்தினர்.

## முக்கிய கலந்துரையாடல்

பாரிய குழிகள்தோண்டும் வாகன (பைக்கோ) உரிமை யாளர்கள், திண்மதிரவக் கழிவுகள் மற்றும் வாகன உரிமை யாளர்கள், திண்ம, திரவ கழிவுகளை அகற்ற வேண்டிய நிறு வனங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் கிளி நொச்சி மாவட்ட தமிழீழ நிர்வாகசேவை மண்டபத்தில் 10.08.2005 ஆம் திகதி (இன்று) மாலை 4.00 மணிக்கு நடைபெறும். தயவு செய்து தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன்கேட்டுக்கொள்கின்றேன்.

பொன். நித்தியானந்தம்,
சிறப்புஆணையாளர்,
கரைச்சி, கிளிநொச்சி.

(சி.12496)

## 01 ஆம், 08 ஆம் ஆண்டு நினைவலைகள்



சின்னத்தம்பி கந்தசாமி

காரை எஸ்.கே.சாமி சாஸ்திரியார்
ஸ்ரீகிருஷ்ணானந்த ஜோதிட நிலையம்.

பிறப்பு:– 13 – 05 – 1943
இறப்பு:– 22 – 07 – 2004

நிரந்தர முகவரி:-
கந்தசாமி சாஸ்திரியார்,
பாலாவோடை,
களபூமி, காரைநகர்.

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
ஆசைக்கு அப்பாவாய்
அன்பிற்கு அண்ணாவாய்
எம் குடும்பத்தை மகிழ்வித்த
உறவுகளே ஓராண்டு
கழிந்தது என் அருமைத்
தந்தைக்கு
எட்டு ஆண்டு கழிந்தது
என் ஆசை அண்ணாவிற்கு
உறவுகளே எத்தனை
ஆண்டுகள்
கழிந்தாலும் ஆறாது எம் மனம்.



தகவல்-
குடும்பத்தினர் (6531)



கந்தசாமி உதயச்சந்திரன்

தலைமைக்காவலர் உதயச்சந்திரன்
தமிழீழ காவல்துறை.

மலர்வு:– 1974 – 11 – 01
உதிர்வு:– 1997 – 08 – 07

தற்காலிக முகவரி:-
மதுஷாவீதி,
தேராவில் சந்திஅருகாமை,
உடையார்கட்டு:.


## வாழ்த்துகின்றோம்

அன்று சிக்கனத்துடன் புதுக்குடியிருப்பு
மகாவித்தியாலயமாகப் பிறப்பெடுத்து இன்று
கம்பீரத்துடன் மத்திய கல்லூரியாகப்
பெயரெடுத்து பொன்விழாக் காணும்
இத்திருநாளில் எம்இனிய கல்லூரித்தாயே
உனை நாம் அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம். (சி.12494)

## நல்லூர் கந்தன் வருடாந்த மகோற்சவம்–2005

### யாழ்ப்பாணம்



வா! வா! சண்முகா! வடிவேல் முருகா!
தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா! வா!

மரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவசிவ ஆறுமுகா வா!
சரவண பவனே! சண்முகனே!
வரம் தர வா வா என் முன்னே
அரவணிசிவனாருள் பாலா பரவரமுரள் பரமதயாளா!
(சிவயோக சுவாமிகள்)

அன்புடையீர்!

யாழ் நகரில் புகழ் பூத்த நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் (10-08-2005) இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கடந்த காலங்களைப்போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி அன்னதான மடத்தில் முருகன் அருள் வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாட்களும் அன்னதானமும் தினமும் காலை 5.00 மணிக்கு கோப்பியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நற்பணிக்கு தங்கள் அன்பார்ந்த ஆதரவை நல்குமாறு வேண்டுகின்றோம்.

C.Somaskandan,
மூத்ததம்பி அன்னதான மடம்,
139, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே-021-222 2389

(சி-12430)

# சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் நியூசிலாந்துக்கு அபார வெற்றி



சிம்பாப்வே நியூசிலாந்து அணிகளுக்கிடையில் ஹராரேயில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 294 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

கடந்த ஏழாம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சிறப்பாக ஆடித் தனது முதல் இன்னிங்சில் ஒன்பது விக்கெட்டுக்களையிழந்து 452 ஓட்டங்களை குவித்தது. அவ்வணியின் டேனியஸ் விட்டோரி, பிரண்டன் மக்கலம் ஆகிய இருவரும் முறையே 127,111 என்ற ஓட்டங்களைப்பெற்றனர். அணித்தலைவர் பிளமிங் 73 ஓட்டங்களைப் பெற்றார்.


சிம்பாப்வே சார்பில் பந்துவீச்சில் மாலியர் மூன்று விக்கெட்டுக்களையும், கீத்ஸ்ரீக், எம்பொபு இருவரும் தலா இருவிக்கெட்டுக்களையும் கிறீமர் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சை தொடர்ந்த சிம்பாப்வே நியூசிலாந்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியாது 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. அவ்வணியின் ஐந்து வீரர்கள் ஓட்டம் எதுவும்பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர்.ஸ்ருவட் காலடில் மட்டும் அதிக பட்சமாக 20 ஓட்டங்களையும், டெய்லர் பத்து ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிறிஸ்மார்ட்டின், பிராங்களின் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும், விட்டோரி இரண்டுவிக்கெட்டுக்களையும் ஷேன் பொண்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இதனால் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சையும் விளையாட நிர்ப்பந்திக்கப்பட்ட சிம்பாப்வே இரண்டாவது இன்னிங்சில் 99 ஓட்டங்களில் சுருண்டது. இதில் மசகட்ஸா 42 ஓட்டங்களையும் பெரைரா 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். ஸ்ரீக் மூன்று ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் பொண்ட், பிராங்ளின், மார்ட்டின் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களையும் விட்டோரி நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக விட்டோரி தெரிவானார்.

# அருமையான வெற்றி பறிபோனது கஸ்பரோவிச் ஆட்டமிழப்பு தவறானது




ஆஷஸ் தொடரில் புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது. கஸ்பரோவிச் ஆட்டமிழப்புக் குறித்து அவுஸ்திரேலியா சந்தேகம் தெரிவித்துள்ளது. நடுவர் அளித்த தவறான தீர்ப்பால் அநியாயமாக வெற்றி பறிபோய் விட்டதாகப் புகார் கூறியுள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகள் இடையே பாரம் பரியமிக்க ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் நடக்கிறது. முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது. இரண்டாவது போட்டி எட்பாஸ்டனில் நடந்தது. பரபரப்பான நான்காம் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா பின்வரிசை வீரர்கள் அபாரமாக துடுப்பாடினர். வோர்ன் (42), பிரட்லீ (43) விளாச, கைக்கு எட்டும் தூரத்தில் வெற்றி இருந்தது. ஆனால், ஹார்மிசன் வீசிய பவுன்சர் கஸ்பரோவிச் வலது கையுறையில் பட்டுச் செல்ல, அதை விக்கெட் கீப்பர் ஜெரைன்ட் ஜோன்ஸ் பிடிக்க, நியூசிலாந்து நடுவர் பில்லி பவுடன் அவுட் கொடுத்தார். இங்கிலாந்து இரண்டு ஓட்ட வித்தியாசத்தில் திரில் வெற்றிபெற்றது.

# ஆஷஸ் டெஸ்ட்தொடரின் மூன்றாவது போட்டி மெக்ராத் பங்கேற்க மாட்டாராம்



நாளை ஒல்ட்ரப்டில் நடைபெறவுள்ள இங்கிலாந்து அணியுடனான ஆஷஸ் கிண்ண டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியிலும் அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் கிளன்மெக்ராத் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முதல் நடைபெற்ற பயிற்சியின்போது காலில் காயப்பட்டார் இவருக்குப் பதிலாக ஷேன்வட்சனை அணியில் இணைப்பது பற்றிப்பேச தேர்வாளர்கள் நேற்று முன்தினம் சந்திப்பொன்றை நிகழ்த்தினர்.

மெக்ராத் தற்போது ஓரளவு குணமடைந்திருப்பினும் மூன்றாவது போட்டியில் பங்கேற்கக் கூடிய அளவு தகுதி பெறவில்லை. மெக்ராத் முதலாவது போட்டியில் 83 ஓட்டங்களைக் கொடுத்து ஒன்பது விக்கெட்டுக்களை வீழ்த்தி ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

இதற்கிடையில் இரண்டாவது போட்டியின்போது அங்கு பிளின்டொப் வீசிய பந்து பிரெட்லியின் கையைப் பாதித்திருந்தது. அதனால் அவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வட்சன் ஒரேயொரு டெஸ்ட்போட்டியில் மட்டுமே பங்கேற்ற அனுபவத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை லீக் நடாத்தும் கால்பந்துப்போட்டி அரையிறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு

தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் யாழ். மாவட்டரீதியில் ஒன்பது பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை வதிரி பொமோர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

விலகல்முறையில் நடைபெற்றுவரும் இந்த சுற்றுப் போட்டியின் அரைஇறுதியாட்டத்திற்கு உரும்பிராய் சென்றல் மக்கள் விளையாட்டுக் கழகம் மையிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம், வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகம், வல்வை கருணகரன் விளையாட்டுக் கழகம் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

இந்த அணிகள் கால்இறுதியாட்டத்தில் சென்மைக்கல் அணி றொட்றேஞ்சர் அணியை 2-1 என்ற கோல் அடிப்படையிலும் ஞான முருகன் விளையாட்டுக்கழகம் சுடர்ஒளி விளையாட்டுக்கழகத்தை 2-0 என்ற கோல்கணக்கிலும், டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் றோயல் விளையாட்டுக்கழகத்தை 2-1 என்ற கோல் கணக்கிலும் கருணகரன் விளையாட்டுக்கழகம் யங்கம்பள்ஸ் விளையாட்டுக்கழகத்தை 1-0 என்ற கோல்கணக்கிலும் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்திற்கு தெரிவாகியுள்ளன. (கீ)

# அகில இலங்கை மெய்வல்லுனர் போட்டி மாத்தளையில் மாத இறுதியில்

அகில இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டு விழா எதிர்வரும் 25,26,27 ஆம் திகதிகளில் மாத்தளையில் நடைபெறவுள்ளது.

இதில் மாகாணமட்ட விளையாட்டுவிழாவில் கலந்து கொண்டு முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (சு)




# கடினப்பந்து கிரிக்கெட் போட்டி கிளி.ம.வி.அணிக்கு 14 ஓட்ட வெற்றி

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு நடைபெற்ற கடினப்பந்துப் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரியை கிளி. ம.வி அணி வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிறன்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 30 ஓவர் கொண்ட இப்போட்டியில் புதுக்கு டியிருப்பு மத்திய கல்லூரியின் 19 வயதுப்பிரிவு அணியும், கிளி. ம.வி யின் 17 வயதுப்பிரிவு அணியினரும் கலந்துகொண்டிருந்தனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளி. ம.வி அணித்தலைவர் க.அனுசன் தனது அணியை முதலில் துடுப்பெடுத்தாடப்பணித்தார்.

கிளி.ம.வி அணி 30 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.கிளி.ம.வி சார்பாக துஸ்நந்தன் 35 ஓட்டங்களையும், ரவிக்குமார் 11ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பா.துசிகாந் எட்டு ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அகிலகிரி மூன்று விக்கெட்டுக்களையும், வசீகரன் இரண்டு விக்கெட்டுக்களையும், ரஜீவன் ஒரு விக்கெட்டையும் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 23 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தீபன் 25 ஓட்டங்களையும், சுகந்தன் 11 ஓட்டங்களையும், பிரதாப் ஏழு ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் அனுசன் நான்கு விக்கெட்டுக்களையும், ஜெயசீலன் நான்கு விக்கெட்டுக்களையும், அனற்டிலக்சன், ரவிக்குமார் தலா ஒரு விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

# 17 ஆவது மாகாணமட்ட மெய்வன்மைப்போட்டி

பதினேழாவது மாவட்டங்களுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வல்லுநர் விளையாட்டு விழா யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் பதின்மூன்றாம், பதினான்காம் திகதிகளில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டு விழாவில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களில் இருந்தும் 215 வீராங்கனைகளும் 262 வீரர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி விளையாட்டு விழாவின் ஆரம்ப நாள் வைபவத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராகவும் இறுதிநாள் நிகழ்வில் உபவேந்தர் மோகனதாஸ் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (சு)

# 10,000 ஓட்டங்களை கடந்தார் ஜெயசூரியா




சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்றவர்களில் இலங்கை அணியின் சனத் ஜெயசூரியவும் இணைந்துள்ளார். நேற்று இந்திய அணிக்கு எதிராக ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அவர் இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றார்.இதன் மூலம் அவர் ஒருநாள் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்ற நான்காவது வீரராகத் திகழ்கிறார். ஏற்கனவே இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், பாகிஸ்தானின் இன்சமாம் உல் ஹக் இந்தியாவின் சவ்ரவ் கங்குலி ஆகியோர் ஒருநாள் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைப் பெற்றுள்ளார்கள்.

# பரபரப்பான இறுதியாட்டத்தில் கிண்ணத்தை சுவீகரித்தது சிறிலங்கா




சிறிலங்காவில் நடைபெற்றுவந்த இந்தியன் ஒயில் முக்கோண கிண்ணத்தை சிறிலங்கா அணி கைப்பற்றியது. நேற்று பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் இரவு பகலாக நடைபெற்ற பரபரப்பான இறுதியாட்டத்தில் 18 ஓட்டங்களால் இந்தியாவை சிறிலங்கா தோற்கடித்தது.


நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிறிலங்கா முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜெயவர்த்தன 83 ஓட்டங்களையும், ஜெயசூரியா 67 ஓட்டங்களையும் ஆனல்ட் 64 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்று ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தனர்.

பந்துவீச்சில் சிறப்பாக பந்துவீசிய நெஹ்ரா ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இந்தியாவின் ஆரம்பம் சிறப்பாக இருந்தபோதும் சிறிலங்காவின் இறுக்கமான களத்தடுப்பு பந்துவீச்சால் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்களையே பெற முடிந்தது.

துடுப்பாட்டத்தில் ராவிட் 69 ஓட்டங்களையும், சேவாக், யுவராஜ்சிங் 48,42 ஓட்டங்களையும், முகமட்கைப் 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர்.பந்துவீச்சில் வாஸ், முரளி, சந்தன தலா இரண்டு விக்கெட்டுக்களையும், டில்சான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும், போட்டிதொடரின் சிறப்பாட்டக்காரராகவும் மகேல. ஜெயவர்த்தன தெரிவானார்.

## சிந்தனைக்கு



சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், ச்ர்வதேச சமூகமும் அசட்டை செய்ய முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்



யாழ்.சாலை,கிளிநொச்சி. 10.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


# ஒற்றுமையாக......!

இந்திய வம்சாவளி மக்களை இழிவுபடுத்தும்வகையில் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்த கருத்துக்களைக் கண்டித்து கொழும்பு நகரில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணியில் சிறுபான்மை யினக்கட்சிகள் ஒன்றிணைந்திருந்தமை வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமானதொரு நிகழ்வாகும்.

இலங்கையில் அரசியல் வரலாற்றில் சிறுபான்மையினக்கட்சிகள் தமக்குள் வேறுபாடுகள் இருந்ததோ இல்லையோ ஒரு பிரச்சினையில் விடயத்தில் ஒன்று சேர்ந்து குரல் கொடுப்பது என்பது மிகவும் அபூர்வமானதொன்றாகவே இருந்து வந்தது. அதிலும் குறிப்பாகச் சிறுபான்மை இன மக்கள் மனத்தளவில் நெருக்கமான உணர்வுகளைக் கொண்டிருந்தபோதும் அரசியல் கட்சிகள் அவ்வாறு நடந்துகொள்வதில்லை.

இந்நிலையில், மலையகத் தமிழ் மக்கள்,- முஸ்லிம் மக்கள்- வடக்கு-கிழக்கு வாழ்தமிழ்மக்கள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்துவோர் தமது ஒற்றுமையை பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சிறுபான்மையினமக்கள் ஒன்று திரண்டு மேர்வின்சில்வாவிற்கும் அதன் மூலம் சனாதிபதி சந்திரிகாவிற்கும் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளமை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கதே.

சிங்கள ஆட்சித் தலைவர்கள் சிறுபான்மை இனங்களுக்கு இடையில் பகைமையையும், வேறுபாட்டையும் தோற்றுவிப்பதில் நீண்டகாலமாகவே முயற்சித்து வந்துள்ளனர்.இதில் அவர்கள் ஓரளவு வெற்றியும் கண்டிருந்தனர் எனக் கூறினும் தவறாக மாட்டாது. இதன் விளைவானது சிறுபான்மையினங்களுக்கு இடையில் தப்பபிப்பிராயங்களும், கருத்து வேறுபாடுகளும் தலைதூக்கியிருந்தமையும் நிராகரிக்கப்பட முடியாததாகவே இருந்தது.

ஒரு வகையில், சிறுபான்மை இனத்தவர்கள் இடையே பகைமை உணர்வையும்-முரண்பாடுகளையும் தோற்றுவிக்க சிங்களப் பேரினவாத சக்திகள் முற்படுகின்றதெனத் தெரிந்திருந்தும் சிறுபான்மை இனக்கட்சிகள்/தலைமைகள், அதற்குப் பலியாகிப் போனமை கவலை அளிக்கும் வரலாறே. இவ்வாறு சிறுபான்மை யினரை பிரித்தாள்வதற்கு பேரினவாத ஆட்சியாளர்கள் கையாண்ட வழிமுறையானது கூடுதல், குறைதல் என்ற ரீதியில் வழங்கிய சலுகைகளே. ஆனால் அவை உரிமைகள் அல்ல.

ஆனால் இதன் பலனாக சிங்களப்பேரினவாதசக்திகள் தமது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொண்டது மட்டுமல்ல, சிறுபான்மை இனங்ளைப் பலவீனப்படுத்தினர். அதாவது அவர்களின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றைச் சிதைத்தனர். அவர்களின் கட்சிகள், அமைப்புக்கள் என்பனவற்றிற்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தி கட்சிகளை, தலைமைகளைப் பலமிழக்கச் செய்தனர்.

இந்நிலையில் தற்பொழுது மேர்வின் சில்வா விவகாரத்தில் சிறுபான்மை கட்சிகள் ஒன்றிணைந்தமையானது எதிர்கால அரசியலிலும் ஒன்றிணைந்து செயற்பட வாய்ப்புக்கள் உள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. அத்தோடு இத்தகைய ஒருமைப்பாடு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு உதவும் என்ற நம்பிக்கையை அளிப்பதாகவும் உள்ளது.

சிறுபான்மை இனக்கட்சிகளை சிங்கள அரசியல்கட்சிகள் தமது செல்வாக்குக்கு உட்படுத்த முனைந்தன என்பது கடந்தகால வரலாறு. ஆனால், எவ்வேளையிலும் எந்தச் சிங்களக்கட்சிகளும் தமது தனித்தவத்தையோ அன்றி கொள்கைகளையோ அவற்றிற்காக பணயம் வைக்கத்தயாராக இல்லை.அத்தகையதொரு தேவை அவர்களுக்கு இருக்கவும் இல்லை.

அதாவது சிறிலங்காவில் ஆட்சி செய்த எந்தச் சிங்களக்கட்சியும் எவ்வேளைகளிலும் தமது பேரினவாதச் சிந்தனையைக் கைகழுவியவதாக இல்லை. வேறொரு விதத்தில் பார்த்தால் மாறி மாறி ஆளும்-எதிர்க்கட்சிகளாக இருந்த இவ்விரு சிங்களக் கட்சிகளும் சிறுபான்மை தொடர்பான நிலைப்பாட்டில் ஒரே கொள்கை, ஒரே அணுகுமுறைகொண்டவைகளாகவே இருந்தன.

உரிமை கோரியவர்கள் மீது அடக்கு முறையையும்-தம்முடன் ஒத்துழைத்த போது அவர்களுக்கிடையில் முரண்பாட்டையும், பிரிவினையையும் ஏற்படுத்தும் வகையிலேயே செயற்பட்டனர். அதுமட்டுமன்றி, சிறுபான்மை இனங்களுக்கிடையில் பகையுணர்வை வளர்க்கவும்முற்பட்டனர். இவ்விருவழிமுறை களையுமே சிறுபான்மை இனங்களைப் பலவீனப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.

இத்தகைய நிலையில், மேர்வின் சில்வாவின் விவகாரத்தில் சிறுபான்மை இனக்கட்சிகள் ஒன்றாகக் கூடி எதிர்ப்பை தெரிவித்துள்ளமை வரலாற்றில் புதியதொரு அத்தியாயமே. இத்தகைய தொரு ஆக்ரோக்கியமான நிலை தொடருமானால் "அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பது போல் சிறுபான்மை இனங்கள் பலம் பெற முடியும்.

# சுனாமி நிதிமோசடியில் மௌனம்: பிரதமர் உடன் பதவி விலக வேண்டும்

### -ஐ.தே.கட்சி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

பிரதமர் மகிந்தராஜபக்ஷ தம்மீது சுமத்தப்பட்ட ஹெல்ப்பின் அம்பாந் தோட்ட நிதி தொடர்பில் இதுவரை உரிய பதிலை வழங்கவில்லை எனவே அவர் பதவி விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன பிரதமரின் குறித்த நிதியை மத்திய வங்கிக்கு தனியார் வங்கி திருப்பியனுப்பிதன் மூலம் அவரின் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவித்தார்.

பிரதம மந்திரியின் மீது ஐக்கிய தேசியக் கட்சி சுமத்திய குற்றங் களுக்கு அவர் இன்னமும் உரிய பதிலை வழங்கவில்லை.

அவர் முன்னர் குறிப்பிட்டது போன்று ஹெல்ப் இன் அம்பாந் தோட்ட நிதியை அமைச்சரவை அங்க கரித்திருக்குமானால் அதனை ஏன் தனியார் வங்கி மத்திய வங்கிக்கு திருப்பியனுப்ப வேண்டும்

குறைந்தது இந்த நிதியின் மூலம் அம்பாந்தோட்ட மக்களுக்கு கூட ஆழிப்பேரலை புனர்வாழ்வு அம்சங்கள் எதுவும் இடம்பெற வில்லை.

எனவே குற்றத்தை பொறுப்பேற்று பிரதமமந்திரி பதவி விலகவேண்டும் என ராஜித சேனாரத்ன கோரிக்கை விடுத்தார். (32)

# பொலிஸ் அத்தியட்சகர் கொலையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை

### — சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் தகவல்

(கொழும்பு)

பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜயவர்தனவின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை யென பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வற்கென யாழ்ப்பாணம் சென்றுள்ள விசேட பொலிஸ் பிரிவினர் சம்பவம் இடம்பெற்ற பிரதேசத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், எனினும், இதுவரை எந்தச் சந்தேகநபரும் கைதுசெய்யப்பட வில்லையெனவும் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் எவ்வாறு நடைபெற்றது, சம்பவம் இடம்பெற்ற போது அங்கிருந்தவர்கள் யாரென்பது தொடர்பான தகவல்கள் தேவைப் படுவதாகவும், அந்தப் பிரதேசத் திலுள்ள மக்கள்மீது சந்தேகப்பட முடியாதெனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத் திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலைய அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தியிருந்தார்.

இதேவேளை, இந்தப் படு கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட வர்கள் சிலரை தாம் அடையாளம் கண்டிருப்பதாகவும், பொலிஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜய வர்த்தனவை சித்திரவதைப்படுத்திய வீட்டினைக் கண்டுபிடித்திருப்பதுடன், அவருக்கு பலவந்தமாக அணிவிக் கப்பட்ட உடையினைக் கைபற்றியிருப் பதாகவும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# சிங்களவனென்பதை சொல்லுங்கள் யாருக்கும் தலைகுனிய மாட்டேன்

### — மேர்வின் சில்வா கூறுகிறார்

மேர்வின் சில்வா சிங்களவன் என்பதனை வானொலியில் சொல்லுங்கள் என பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். ஐக்கியதேசியக் கட்சியின் பணத்தில் ஊர்வலம் சென்றதற்காக மேர்வின் சில்வா பதவி விலகப் போவதில்லை எனத் தெரிவித்த அவர். தான் திருடவில்லை, வஞ்சிக்கவில்லை, கட்சி விரோத செயல்களில் ஈடுபடவில்லை, ஆகவே சந்திரசேகரனுக்கோ மகேஸ்வரனுக்கோ வேண்டிய விதத்தில் செயற்படப்போவதில்லை எனவும் மேர்வின் சில்வா சிங்களவன் என்பதனை வானொலியில் சொல்லுங்கள் தான் யாருக்கும் தலைகுனிய மாட்டேன் எனவும் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற ஊர்வலத்தின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துக் தொடர்பிலேயெ அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் (32)

# சுழல் காற்றின் ஆபத்திலிருந்து பாதுகாப்புத் தேட மக்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

சுழல் காற்று வீசும் நிலை ஏற்பட்டால் உடனடியாக மின் விநியோகத்தை செயலிழக்கச் செய்து, காற்று வீசாத பாதுகாப்பான இடத்திறகுச் செல்லுமாறு இயற்கை அழிவு முகாமைத்துவம் மற்றும் தகவல் திட்டம் பொதுமக்களுக்கு அறிவித் துள்ளது.

சுழல் காற்றினால் இதுவரை நாட்டின் பல மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், காற்று வீசும் வேளையில் என்ன செய்ய வேண்டும் என அறியாமையினாலேயே பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவக்கும் இத்திட்டம் உயிர் மற்றும சொத்துச் சேதத்தைக் குறைக்கும் வகையில் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

சுழற்காற்று ஏற்பட்டு ஒரு சிறு பிரதேசத்தில் பாதிப்பை ஏற்படுத்திவிட்டுச் செல்வதாகவும், பெருமள வில் காலை வேளைகளிலேயே இந்தக் காற்று வீசுவதாகவும் கூறப்படுகிறது.

அதிகளவு மேகங்கள் தோன்று கையில் இந்தக் காற்று வீசப்படுகிறது. பிரதேசத்தில் ஒரு பகுதி இருட்டா கவும் மற்றைய பகுதி பிரகாசமாக இருப்பதாகவும், அவ்வாறான நிலைமை யில் எவ்வாறு நடந்துகொள்வது என்பது பற்றி வீட்டிலிருக்கும் அனைவரும் ஒரே முடிவுடன் இருப்பது நல்லது என்றும் இயற்கை அழிவு முகாமைத் துவ மற்றும் தகவல் திட்டம் தெரிவிக் கின்றது.

வட்டுக் கூரை தொடர்பாக மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும், தென்னோலை, அஸ்பெஸ்டஸ் சீட், தகரம் என்பவற்றை கூரைக்குப் பயன்படுத்தியிருந்தால் கூடுதல் கவனத்துடன் இருக்குமாறும் கூறப் பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஞாயிற்றுக் கிழமை வீசிய சுழல்காற்றினால் ஹொரணமில்லாவே பிரதேசத்தில் 13 வீடுகளும், பாதுக்கை தலகல பிரதேசத் தில் நான்கு வீடுகளும் சேதமடைந் துள்ளன. இந்த சுழல்காற்று சுமார் ஐந்து நிமிடங்கள் வீசியதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

காற்றினால் வீடுகளுக்கருகே இருந்த மரங்கள் முறிந்து விழுந்த தினால் வீடுகள் சேதமடைந்துள்ளன. இநத வீடுகளிலிருந்தவர்கள் வீடுகளை விட்டு வெளியேறியதால் உயிரிழப் புக்கள் எதுவும் ஏற்படவில்லை என அறிவிக்கப்படுகிறது.

# கரையோரங்களில் மரம் நாட்டல்

(கொழும்பு)

கரையோரங்களில் மரங்களை நடுவதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் கவனம் செலுத்தி வருவதாகவும், இவ்வருட இறுதிக் குள் மரங்களை நடும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் எதிர் பார்த்துள்ளதாக மேற்படி திணைக் களம் தெரிவித்துள்ளது. இதன்படி கரையோரப் பிரதேசங்களில் மரங்களை நடும் பணி தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் இதன் மூலம் சுனாமி போன்ற அனர்த்தங்களின் போது கரையோரப் பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு செயற்றிட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# மேல் கொத்மலை திட்டத்தை எதிர்த்து தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிராக மலையக இளைஞர் மன்றம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தலவாக்கலை நகர மத்தியில் ஆரப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த ஆர்பாட்டபேரணிக்கு ஆதரவு வழங்குமாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மற்றும் ஏனைய அரசியல் தொழிற்சங்க தலைவர்களை நேரடியாக சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில் மலையகத்தின் பொது அமைப்புகளும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று மேல் கொத்மலை திட்டத்தை தடுக்க முன்வரவேண்டும் என மலையக இளைஞர் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது (32)

# அறிவும் ஆயுதமுமாக தனது சிந்தனையை மாவீரன் நீதிவளவன் வெளிப்படுத்தியிருந்தார்

## -நூல் வெளியீட்டு நிகழ்வில் க.வே. பாலகுமாரன்



அறிவும் ஆயுதமுமாக தனது சிந்தனையை மாவீரன் நீதிவளவன் வெளிப்படுத்தி இருந்தார் என தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

மாவீரர் 2ஆம் லெப்டினன்ட் நீதிவளவனின் "விழுதொன்றின் குரல் அல்லது மனிதம் புரிதல்" நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அறிவும் ஆயுதமுமாக தனது சிந்தனையை மாவீரன் நீதிவளவன் வெளிப்படுத்தி இருந்தார். தனது 18ஆவது வயதில் மிகப்பெரிய செய்தியை அவர் கூறியிருக்கிறார்.

இந்த நூல் தரக்கூடிய தாக்கம் சாதாரணமானதல்ல. ஆயுதமும் கருத்தும் கலந்த புதிய பரிமாணமாக போராளிகள் இருக்கவேண்டும். அதன் ஒரு வெளிப்பாடாக நீதிவளவன் இருந்தார்.

இன்று சிங்களவர்களே தமது நாடு என்று சொல்லும் நாட்டை சுரண்டி சூறையாடிக்கொண்டிருக்கிறார்கள். இது உண்மையில் அது சிங்களவர்களுடைய நாடா என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றது.

இன்று விடுதலைப் புலிகளிடம் ஏன் இன்னும் பொறுமை காக்கிறீர்கள் என மக்கள் கேட்கின்றனர். எமது மக்கள் பொறுமையின் எல்லையை கடந்துவிட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் அரசண்ணா தலைமையில் இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியை புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஏற்றிவைத்தார்.


ஈகச்சுடரை கிளிநொச்சி தமிழ்ச் சங்க செயலர் பரமநாதபிள்ளை ஏற்றி வைக்க மாவீரர்களுக்கான சுடரை நீதிவளவனின் பெற்றோர் ஏற்றி வைத்தனர்.

வரவேற்புரையை புலிகளின் குரல் நிகழ்ச்சி அமைப்பாளர் கோகுலன் நிகழ்த்தினார். வாழ்த்துரையை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வழங்கினார்.

வாழ்த்துரை மற்றும் சிறப்புரையை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் நிகழ்த்தினார்.

நூலின் முதல் பிரதியை தமிழர் புனர்வாழ்வுக்கழக துணைப் பணிப்பாளர் றீகன் வெளியிட அதனை தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறுவர் நலன்பிரிவைச் சேர்ந்த ரவி பெற்றுக் கொண்டார். விமர்சன உரைகளை போராளி கு.கவியழகன், பு.சத்தியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினர்.

# மின்கம்பம் முறிந்து வீழ்ந்ததால் மின்விநியோகம் துண்டிப்பு



(அலுவலக செய்தியாளர்)

மின்கம்பம் முறிந்து வீந்ததனால் புதுக்குடியிருப்பில் மின்விநியோகம் இரண்டு நாட்களாகத் தொடர்ந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையினரால் வழங்கப்பட்டுவரும் மின்விநியோகம் கடந்த திங்கள் இரவு முதல் தடைப் பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் அமைக்கப்பட்ட மின்கம்பங்களில் ஒன்றே வாகனம் மோதி முறிந்து வீழ்ந்துள்ளது. இதன்போது வர்த்தக நிலையம் ஒன்றும் சிறிய அளவில் சேதமடைந்துள்ளது.

இதனால் அவற்றை நிவர்த்தி செய்து மின் விநியோகத்தைத் தொடர்ந்து வழங்குவதற்குரிய மின்சாரசபை ஊழியர்கள் புதுக்குடியிருப்பில் இல்லாததால் தொடர்ந்து மின்வழங்கல் செயற்பாடு தடைப்பட்டுள்ளது.

எனவே இவற்றை நிவர்த்தி செய்து மின்விநியோகத்தைச் சீர் செய்து தருமாறு புதுக்குடியிருப்பு மின் பாவனையாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டியுள்ளனர்.(கு,8)

# பல் மருத்துவ சிகிச்சை

ஐக்கியராச்சியத்திலிருந்து வருகை தந்திருக்கும் பல் மருத்துவ நிபுணர் பேராசிரியர் அரியரட்ணம் அவர்களால் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் நாளை காலை ஒன்பது மணிமுதல் பிற்பகல் இரண்டு மணிவரை குறிப்பாக வாய்ப்புண், வாய்எரிவு, வாய் சத்திரசிகிச்சை, அல்குநோய், முரசு வீக்கம், முரசுப்புண் சம்பந்தமான நோயாளர்களுக்கு ஆலோசனையும் சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளது. பயன்பெறவிரும்புவோர் மருத்துவ மனையின் வெளிநோயாளர் பகுதியில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## யாழ்..

யாழ், குடாநாட்டினில் தொடர்ச்சியான வாகன விபத்துக்களும் அதனால் உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்ற நிலையில், தேசிய போக்குவரத்து நடைமுறைகளை இங்கு அமுல்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தேசிய போக்குவரத்துக்குழுவின் நடவடிக்கைப் பணிப்பாளர் எம்.ஏ.பெரேரா, அதன் திட்டமிடல் பிரிவின் இணைப்பாளர் ஜே.ஏ.வீரசிங்க, யாழ். மாவட்ட போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் வி.சேனாரட்ன, மாநகர ஆணையாளர் க. குணராசா மற்றும் தனியார் ஊர்தி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளெனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் யாழ். குடாநாட்டின் போக்குவரத்து ஒழுங்கு முறைகள் மிகவும் மோசமாக சீர்கெட்டிருப்பதாக அங்கு எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே தேசிய போக்குவரத்து நடைமுறைகளை குடாநாட்டில் முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ். நகரப்பகுதியில் நிலவிவரும் வாகன நெரிசலைக் கருத்திற்கொண்டு யாழ். கோட்டையினை அண்டிய முற்ற வெளிப்பகுதிக்கு தனியார் பேருந்துத் தரிப்பிடத்தை மாற்றுவதெனவும், அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அந்நடைமுறை அமுலுக்கு வருமெனவும் தெரிவிக்கப்பட்டது.(27)

## கொழும்பின்..

சேவையையும், நீதி நடவடிக்கையையும் முறையாகக்கொண்டு செல்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கொழும்புப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிறிலங்கா பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

தொழில் நெருக்கடி குறித்து இந்தப் பேச்சுவார்த்தையில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் முதலாவது கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது கொழும்புப் பிரதேசத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டதாகவும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். இதேவேளை குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் விசேட செயற்றிட்டம் மூன்றாவது வாரமாகவும் தொடரவுள்ளது.

இரண்டாவது வாரம் முடிவடைந்தபோது பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 763 பேர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

## 2006இல்...

எனவே இதன்படி 2006 ஆம் ஆண்டிலேயே அடுத்த சனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனத் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட வேண்டும் என மைத்திரிபால சிறிசேன தமது மனுவில் கேட்டுள்ளார். (32)

## இனரீதியில்...

ரையும் நிவர்த்தி செய்யப்படவில்லை. இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலமாக குறைகள் தெரிவிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையிலேயே தமது அடிப்படை வசதிகளை வலியுறுத்தியும், தம்மை அரச அதிகாரிகள் புறக்கணிப்புச் செய்வதையும் கண்டித்து இம் மக்களினால் இந்த வீதி மறியற்போராட்டமும், ஆர்ப்பாட்டப் பேரணியும் நடாத்தப்பட்டுள்ளது.

"சுனாமியால் வீடுகளை இழந்த எங்களுக்கு நிரந்தர வீடுகள் பெற்றுத் தருவதற்கு அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்காதது ஏன்?"

"நாங்கள் தமிழர் என்பதாலா?"

"மலசலகூடத்தை எமது தேவைக்காக உடனடியாக அமைத்துக்கொடு."

"எமக்குரிய நிரந்தர கிராம சேவையாளர் நியமிக்கப்படாதது ஏன்?"

"ஒன்றுக்கும் உதவாத தற்காலிக கூடாரங்களில் நாங்கள் தொடர்ந்து வாழ்வதுதான் முடிவா? அல்லது குடிசை வாழ் மக்கள் என்ற எண்ணத்திலா?"

"வீட்டு வங்கி மானியக்கொடுப்பனவு எஸ்.ஓ.எஸ் எனும் நிறுவனத்தின் அனுமதியின்றி வழங்க நடவடிக்கை எடு"

"நுவரெலியாவில் இருந்து ஒப்பம் செய்த எஸ்.ஓ.எஸ் இற்கு கோமாரி பற்றி என்ன தெரியும்?"

"அரசசார்பற்ற நிறுவனங்களின் தன்னிச்சையான போக்கு நீக்கப்பட வேண்டும்."

"தரம் ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு எமது பிரதேசத்திலேயே பாடசாலைகள் அமைத்துத் தர வேண்டும்."

"எங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத்தரும் வரை எமது போராட்டம் தொடரும்." எனப் பல கோரிக்கைகள் ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்வைக்கப்பட்டன.

இவர்களின் பிரச்சினைகள் இன்னும் ஒரு வாரத்திற்குள் தீர்க்கப்படும் எனப் பிரதேசசெயலாளர் அம் மக்களுக்கு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவ்வாறு ஒருவாரத்தில் தீர்வுகள் ஏதும் காணப்படா விட்டால் நாங்கள் தொடர்ந்து எமது ஆர்ப்பாட்டத்தை நடத்துவோம் என அம் மக்கள் தெரிவித்தனர்.

## போர்நிறுத்த...

அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நோர்வே அரசின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் விதார் ஹெல்கேசன், நோர்வே வெளியுறவுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகளான மக்னீ ருட், மற்றும் சொல்பரி அம்மையார் ஆகியோர் நேற்று முன்தினம் காலை அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களையும், அவரது துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களையும் லண்டனிலுள்ள வதிவிடத்தில் சந்தித்து இலங்கை அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடினர்.

இரண்டு மணி நேரம் வரை நிகழ்ந்த இந்த சந்திப்பில், முக்கியமாக போர்நிறுத்த உடன்பாட்டை நிலைப்படுத்திப் பலப்படுத்தும் சாத்தியக் கூறுகள் குறித்துப் பேசப்பட்டது.

போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளையும், கடப்பாடுகளையும் சிறிலங்கா அரசு செம்மையாகக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், ஒரு நம்பிக்கையூட்டும் நல்லெண்ண நடவடிக்கையாக தமிழ்த் துணைப் படைகளின் ஆயுதங்கள் களையப் பெறுவது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்குவதற்கான சரியான புறநிலையை அமைத்துக் கொடுப்பது அரசின் கடப்பாடு என வலியுறுத்திய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், போர் நிறுத்தம் சரிவரப் பேணப்படுவதற்கு இது முக்கியம் எனவும் மேலும் குறிப்பிட்டார்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக் காரணமாக, பொதுக்கட்டமைப்பு முடக்கம் கண்டுள்ள நிலையில், கடற்கோளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நேரடியாக உதவி வழங்குவது அனைத்துலக சமூகத்தின் தார்மீகப் பொறுப்பு என்றும், நோர்வே அரசிடம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்.

# சாவு அறிவித்தல்



## இராமலிங்கம் இராமநாதன்

புங்குடுதீவு 1-ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இராமநாதபுரம் புதுக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராமநாதன் 07.08.2005 அன்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற தம்பிஐயா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ருக்குமணி அவர்களின் அன்புக் கணவரும். தெய்வகலா, மாலா, மல்லிகா, நாதகிருஷ்ணன் (இத்தாலி), காலஞ்சென்ற இராஜலிங்கம், சிவலிங்கம் (பிரான்ஸ்), சிறிகாந்தன் (இத்தாலி), லோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருஞானலிங்கம் (வில்வம்), இராசரத்தினம் (பிரான்ஸ்), கனகேஸ்வரி (இத்தாலி), இராசேந்திரம் (கண்டாவளை), சுபாசினி (பிரான்ஸ்), செல்வகலா (நீர்கொழும்பு), தெய்வேந்திரம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 11.08.2005 வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக மம்மில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
பேரப்பிள்ளைகள்

(சி.12512)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.